தமிழரசு

Tamilarasu

செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

(Monthly)

ஜனவரி 2026 (January 2026)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

மலர் (Vol.) : 56
இதழ் (Issue) : 7

பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000 வழங்கும் திட்டம்–2026

வெல்வோம் ஒன்றாக!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.12.2025 அன்று திருநெல்வேலி அருகே 13 ஏக்கர் நிலப்பரப்பில் 54,296 சதுர அடி பரப்பளவில் ரூ.56.36 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தினைத் திறந்து வைத்தார்.



அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும், புதிய வெற்றிகளும் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக அனைவருக்கும் அமையட்டும்...

2026

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி - 2026

பல வகைகளிலும் தமிழ்நாட்டுக்கு வெற்றிகரமான ஆண்டாக அமைந்த 2025-க்கு விடைகொடுத்து, இதுவரை காணாத மாபெரும் வெற்றியை வழங்கவுள்ள 2026-இல் அடியெடுத்து வைக்கத் தயாராகிறோம்!

தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் எழுச்சிக்கும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கும் மிகச் சிறந்த ஆண்டாக 2025 அமைந்தது என்றால், அது மிகையாகாது. பொருளாதார வளர்ச்சியிலும் - GSDP வளர்ச்சியிலும் முதலிடம் என நமக்குக் கிடைத்துள்ள அங்கீகாரங்கள் 2030-க்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் நம் கனவுக்கு வலுவூட்டுகிறது.

மகளிர், உழவர், மாணவர், மாற்றுத்திறனாளிகள், மீனவர், வணிகர், நெசவாளர், விளிம்பு நிலை மக்கள், தொழில் முனைவோர், விளையாட்டு வீரர்கள் என அனைத்துத் தரப்பினரின் மனங்களையும் மகிழ்விக்கும் திட்டங்கள் நிறைந்த ஆண்டாக 2025 அமைந்தது. வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டமும், இதுவரை இல்லாத அளவுக்குப் பட்டாக்களை வழங்கி நிலம் எனும் அதிகாரத்தை எளியோருக்கு வழங்கியதும் நமது திராவிட மாடல் அரசில் முன்னுரிமை யாருக்கு என்பதற்குச் சான்றாக அமைந்தன.

உங்களுடன் ஸ்டாலின் முகாம்களால் மக்களின் தேவைகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டு வருகின்றன, நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களால் உயர்தர சிறப்பு மருத்துவ சேவைகள் மக்களுக்குக் கிடைத்து வருகின்றன. கல்வியில் சிறந்த தமிழ்நாடு, வெல்லும் தமிழ்ப் பெண்கள் என 2025-இல் தலைநிமிர்ந்துள்ளோம்! காலை உணவுத் திட்டமும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமும் பெருமளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களுக்கும் பரவலான, சமத்துவமான வளர்ச்சியும் சாத்தியமாகி வருகிறது.

தொகுதி மறுசீரமைப்பு ஆபத்தை எதிர்த்து அகில இந்திய அளவில் அணிதிரட்டல், சிறப்புத் தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியல் சூழ்ச்சியில் இருந்து நம் மக்களின் வாக்குரிமையைக் காப்பது, மாநிலச் சுயாட்சிக்காக உயர்நிலைக் குழு அமைத்தது, மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிட்டது, கல்வி நிதிக்காக ஒன்றிய அரசிடம் உரிமைக்குரலை எழுப்பியது, ஆளுநரின் அதிகார மீறலுக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்பினைப் பெற்றது என வழக்கம் போல இந்த ஆண்டும் மாநில உரிமைகளுக்கான நமது போராட்டங்களுக்கும் குறைவே இல்லை. மொத்தத்தில் தமிழ்நாடு யாருக்கும் தலைகுனியாது, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என உலகத்துக்குப் பறைசாற்றிய ஆண்டுதான் 2025!

நாம் இதுவரை பெற்ற வெற்றிகள் தந்த ஊக்கத்தோடும், போராட்டங்களால் பெற்ற துணிவோடும் 2026-இல் மாபெரும் வெற்றியை நோக்கி முன்செல்கிறோம்! நாம் என்றால் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் அனைவரும் பெறப்போகும் வெற்றியைத்தான் குறிப்பிடுகிறேன். அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும், புதிய வெற்றிகளும் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக 2026 அனைவருக்கும் அமைந்திட எனது புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு வருடம்: மார்கழி - தை
ஜனவரி 2026

மலர் : 56 விலை ரூ.30 இதழ் : 7

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. **இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
மு. சத்தியசீலன்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் /
உதவி இயக்குநர்
எஸ். உதயா கதிரவன்

பொறுப்பாசிரியர்கள் /
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
மு. மணிமேகலை

உதவி ஆசிரியர்
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ். ஸ்ரீந்தர்
ஜெ. ஜெயசிம்ஹன்

முதுநிலை ஓவியர்
ரா. சாமுண்டிஸ்வரி

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினிவழி வடிவமைப்பாளர்கள்
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

பிழைதிருத்தம் மேற்கொள்பவர்
த. பிரியா

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (குறள்: 267)

தம்மைத் தாமே வருத்திக் கொண்டு ஒரு குறிக்கோளுக்காக நோன்பு நோற்பவர்களை எந்தத் துன்பங்கள் தாக்கினாலும் அவர்கள் சுடச்சுட ஒளிவிடும் பொன்னைப்போல் புகழ் பெற்றே உயர்வார்கள்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும், புதிய வெற்றிகளும் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக அனைவருக்கும் அமையட்டும் 3

★ "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" விழாவில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் விரிவாக்கம் 5

★ மதுரை மாவட்டத்தில் ரூ.417.43 கோடி மதிப்பீட்டில் 1,77,562 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் 18

★ மதுரையில் முதலீட்டாளர்கள் மாநாடு ரூ.36,660.35 கோடி முதலீட்டில் 56,766 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் - 23

★ ரூ.125 கோடி ஒதுக்கீட்டில் மாற்றுத் திறனாளிகளின் இருப்பிடத்திற்கே சென்று அவர்களின் மறுவாழ்வு சிகிச்சைக்கான பயிற்சி 30

★ திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.1,400.57 கோடி மதிப்பில் 2,66,194 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் 34

★ கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரூ.1,045 கோடி மதிப்பில் 2,16,056 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் 43

★ திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.56.36 கோடி செலவில் "பொருநை அருங்காட்சியகம் 54

★ குடிமைத் தேர்வுகளில் நான் முதல்வன் திட்டத்தால் இலக்குகளை எளிதில் ஈட்டி இளைஞர்கள் படிப்படியாக வெற்றி குவிக்கின்றனர் 65

★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பயிற்சி வினா-விடைத்தாள் 75

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 12.12.2025 அன்று சென்னை, நேரு உள் விளையாட்டரங்கில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" நிகழ்ச்சியில் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின்" இரண்டாம் கட்ட விரிவாக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

"வெல்லும் தமிழ்ப் பெண்கள்" விழாவில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் விரிவாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 12.12.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டரங்கத்தில், தமிழ்நாடு அரசு பெண்களுக்காகச் செயல்படுத்தும் பல்வேறு முன்னோடித் திட்டங்களின் சாதனைகள், பயனடைந்த மகளிரின் அனுபவங்கள், தமிழ்நாட்டின் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் முக்கிய பெண் சாதனையாளர்களை ஒன்றிணைத்து, பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசு மேற்கொண்ட முன்னெடுப்புகளை எடுத்துக்காட்டும் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தமிழ்நாட்டின் சாதனைப் பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்ட விழா நடைபெற்றது. இவ்விழாவில், 16 இலட்சத்து 94 ஆயிரத்து 339 மகளிர் பயன்பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் 2-ஆம் கட்ட விரிவாக்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, 10 மகளிர்க்கு உரிமைத் தொகைக்கான வங்கிப் பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்

"தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மகளிருக்கான ஒரு மாபெரும் முன்னெடுப்பாக, மகத்தான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் ஏறத்தாழ ஒருகோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும்" என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 27.03.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.09.2023 அன்று காஞ்சிபுரத்தில் முதற்கட்டமாக சுமார் 1.13 கோடி பயனாளிகள் பயன்பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். கலைஞர் மகளிர் உரிமைத் தொகையானது ஒவ்வொரு மாதமும் 15-ஆம் தேதி மகளிருக்கே நேரடியாகச் சென்றடையும் வகையில் அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

பெண்களின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் இத்திட்டம், மேலும், 16 இலட்சத்து 94 ஆயிரத்து 339 மகளிர் பயனடையும் வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2-ஆம் கட்ட விரிவாக்கத்தைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.12.2025 அன்று மகளிர்க்கு உரிமைத் தொகைக்கான வங்கிப் பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார். இதன்மூலம், மொத்தம் 1 கோடியே 30 இலட்சத்து 69 ஆயிரத்து 831 மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெற்றுப் பயன்பெறுவர்.

இதே நேரத்தில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மகளிர்க்கு நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் 1,000 ரூபாயைச் செலுத்தும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' – தமிழ்நாட்டின் சாதனைப் பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் விழா

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், நன்னிலம் மகளிர் நிலவுடைமைத் திட்டம், விடியல் பயணம், மக்களைத் தேடி மருத்துவம், சுய உதவிக் குழுக்கள், வெற்றி நிச்சயம், நலம் காக்கும் ஸ்டாலின், பெண் தொழில் முனைவோர், தோழி விடுதிகள் போன்ற திட்டங்களில் பயனடைந்த, சாதனை படைத்த பெண்களின் வெற்றிக் கதைகளை வெளிக்கொணரும் நிகழ்வாக மாநில அளவில் 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' விழா நடைபெற்றது.

பெண்கள் நலன்

பணி நிமித்தமாக தங்கள் சொந்த ஊர்களை விட்டுப் பிற நகரங்களுக்குச் சென்று பணிபுரியும்

பெண்களின் தேவைகளை உணர்ந்து தரமான, பாதுகாப்பான, குறைந்த கட்டணத்தில் பெண்களுக்கான தங்கும் விடுதிகளான "தோழி விடுதிகள்" தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. தோழி விடுதிகளில் தங்கிப் பயன்பெற்றுள்ள பயனாளிகள், விடுதிகளில் செய்து தரப்பட்டுள்ள வசதிகள், பாதுகாப்பான சூழல் குறித்தும் எடுத்துரைத்து, இத்திட்டத்தைச் செயல்படுத்தி வரும் திராவிட மாடல் அரசிற்குத் தங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

மக்களின் இல்லங்களுக்கே சென்று மருத்துவ வசதிகளை அளிக்கும் மக்களைத் தேடி மருத்துவம், மக்களுக்கு உயர் மருத்துவச் சேவைகள் வழங்கிடும் வகையில் நலன் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாம் திட்டம், முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் வாயிலாகப் பயன்பெற்ற பயனாளிகள் அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில், திரைப்பட நடிகை திருமதி தேவயானி, திரைப்பட இயக்குநர் வசந்தபாலன், பெண்களுக்கான சிறப்பு மருத்துவர் ஃபரூக் அப்துல்லா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பெண் ஆளுமை

காவல்துறையைச் சார்ந்த பெண் கமாண்டோக்களின் சாகச நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். பின்னர், பஞ்சாயத்துத் தலைவி, பெண் கவுன்சிலர், இஸ்ரோ திட்ட இயக்குநர் திருமதி நிகார் ஷாஜி, மேஜர் ஜென்ரல் திருமதி இக்னிசியஸ் ஃபிளோரா ஆகியோர் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதோடு, தங்களை ஊக்கப்படுத்தி வரும் தமிழ்நாடு அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். இதில் பெண் ஓதுவார், கல்பனா சாவ்லா விருது பெற்ற எழிலரசி ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்பாராத விபத்தில் கைகளை இழந்த பீகார் மாநில இளைஞருக்குக் குறுக்கு கைமீள் இணைப்பு மறுசீரமைப்பு நுண்அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு ஒரு கையைச் செயல்பட வைத்த சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் மருத்துவர் பி. ராஜேஸ்வரி அவர்கள் தலைமையிலான பெண் மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் பத்து மணி நேரம் தாங்கள் மேற்கொண்ட Cross hand replantation என்ற உலகளவில் மிகவும் அபூர்வமான, சவாலான அறுவை சிகிச்சை மேற்கொண்டு அந்த இளைஞரின் வாழ்வினை மீட்டெடுத்தது குறித்து விளக்கினார்கள்.

இந்நிகழ்வில், இஸ்ரோ திட்ட இயக்குநர் திருமதி நிகார் ஷாஜி, பல்வேறு நிறுவனங்களின் தலைமைச் செயல் அலுவலர்கள், கவிஞர் கவிதா ஜவஹர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொழில்துறையில் வேலைவாய்ப்பில் பெண்களின் ஏற்றம்

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை

உருவாக்கிடவும், உலகின் முன்னணித் தொழில் நிறுவனங்களின் முதலீடுகளைத் தமிழ்நாட்டிற்கு ஈர்த்திட பல்வேறு மாவட்டங்களில் முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தி, மாநிலம் முழுவதும் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இத்தொழில் நிறுவனங்களில் குறிப்பாகப் பெண் தொழிலாளர்கள் அதிக அளவில் வேலைவாய்ப்புப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுப் பயன்பெற்ற பெண் தொழிலாளர்கள், வேலைவாய்ப்புப் பெற்றுத் தங்கள் வாழ்வு மேன்மையுற உதவிய தமிழ்நாடு அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

மேலும், தமிழ்நாடு அரசு வழங்கிய கடனுதவிகள், திறன் பயிற்சிகள் மூலம் வெற்றிகரமான தொழில் முனைவோர்களாகத் திகழும் பெண்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில், தையல் தொழில் செய்து வரும் முகாம்வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண் செல்வி சாரா அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தான் எம்பிராய்டரி செய்து தயாரித்த "அப்பா" என்ற எழுத்துடன்கூடிய கைக்குட்டையை வழங்கினார்.

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த காது கேளாத வாய்பேச முடியாத மாற்றுத்திறனாளி எழிலரசி அவர்கள் வெற்றி நிச்சயம் திட்டம் மூலம் திறன் பயிற்சி பெற்று வேலைவாய்ப்பு கிடைத்துப் பயனடைந்த அனுபவத்தைச் சைகை மொழி மூலம் விளக்கி, தமிழ்நாடு அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில், திரைப்பட நடிகர் திரு.சத்யராஜ், திரைப்பட இயக்குநர், எழுத்தாளர் திரு.ஞானவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

விடியல் பயணம் திட்டம்

பெண்களுக்கான விடியல் பயணம் திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள், இத்திட்டத்தின் மூலம் பேருந்து பயணத்திற்கான செலவு

என்னுடைய வாழ்க்கை மேம்பட்டு நிற்க உதவிய “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்”

இந்நிகழ்ச்சியில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பயனடைந்த பயனாளி சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை பகுதியைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி திருமதி ருக்மணி அவர்கள் பேசும்போது,

எனது பெயர் ருக்மணி, நான் சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை பகுதியில் வசித்து வருகிறேன். தமிழ்நாடு அரசின் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தில் பயன்பெறும் பெண்கள் அதிகம். மாற்றுத் திறனாளியான நான் வேலைக்குச் செல்ல முடியாத நிலையில் வீட்டிலேயே இருந்து வருகிறேன். அவசரத் தேவைக்காக மற்றவரின் கையை எதிர்பார்த்துக் காத்திருப்பேன். சில நேரங்களில் பணம் இல்லாமல் மிகவும் இக்கட்டான நிலையிலும் இருந்துள்ளேன். ஆனால், இப்போது மாதந்தோறும் 1,000 ரூபாய் மகளிர் உதவித் தொகையைப் பெறுவதில் நானும் ஒரு பயனாளி. இதனால், யாரிடமும் நான் பணம் கேட்டு நிற்பதில்லை. நானும், என்னுடைய இரண்டு குழந்தைகளின் தேவையை இதை வைத்தே சரி செய்து வருகிறேன். மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தால் என்னுடைய வாழ்க்கை மேம்பட்டு நிற்கிறது.

மிச்சப்படுத்துவதன் மூலம் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமிக்க முடிகிறது என்றும், அதனைத் குழந்தைகளின் படிப்பு, குடும்பத்தின் இதரச் செலவுகளுக்குப் பயன்படுத்துவதாகத் தெரிவித்து, இத்திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வரும் அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தில் பயன்பெற்று வரும் பயனாளிகள், இத்தொகையினைத் தங்கள் குடும்பத்தின் மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தியது குறித்து விளக்கி, தமிழ்நாடு அரசிற்குத் தங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், திரைப்பட நடிகை திருமதி ரோகிணி, திரைப்பட இயக்குநர் திரு. ராஜ் முருகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில், பெண் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், இந்தியக் காவல் பணி அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றும் பெண்கள் உள்ளிட்ட பெண் அரசு உயர் அலுவலர்கள் மேடையில் தோன்றினார்கள்.

சிறப்பு விருந்தினர்கள்

இவ்விழாவில், சமூகச் சேவகியும், சமூக அநீதிகளுக்கு எதிராக காந்திய வழியில் போராடியவரும் பத்மபூஷன் விருது பெற்றவருமான திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பேட்மிட்டன் விளையாட்டு வீராங்கனையும், 2024-ஆம் ஆண்டு நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றவருமான

செல்வி துளசிமதி முருகேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

நான் இந்த நிகழ்ச்சிக்கு வந்து மூன்று மணி நேரம் ஆகியிருக்கிறது. இங்கே பேசிய எல்லோருடைய பேச்சைக் கேட்டேன் என்று சொல்வதைவிட, நெஞ்சை உருக்குகின்ற, தன்னம்பிக்கையையும், புது நம்பிக்கையையும் கொடுக்கும் உங்களின் கதைகளை, பேச்சைக் கேட்டு, மகிழ்ச்சியில் என்று சொல்வதை விட, நெகிழ்ச்சியில் இருந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும்! உள்ளத்திலிருந்து பேசிய உங்களுக்கும் – உற்சாகமாக கைத்தட்டல்களை வழங்கிய சகோதரிகள் அனைவருக்கும் என்னுடைய நன்றி! நன்றி! நன்றி!

என்னுடைய நன்றி என்பது, இந்தக் கடமையைச் சிறப்பாக, இன்னும் சிறப்பாக ஆற்ற வேண்டும் என்ற உணர்வின் வெளிப்பாடு! இந்த நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக இரண்டு பேரை அழைத்திருந்தோம். ஒருவர் மரியாதைக்குரிய அம்மா கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவர்கள்; தன்னுடைய 100 வயதில் நிறைவாழ்க்கை வாழ்ந்து, பொது வாழ்க்கையில் வெற்றி பெற்றவர். மிகவும் பொருத்தமானவர்;

மற்றொருவர் இளம் வெற்றியாளர் சகோதரி துளசிமதி முருகேசன் அவர்கள். எவ்வளவு சிறப்பாகப் பேசினார்கள். விளையாட்டுத் துறையில் மட்டுமல்ல; அரசியல் துறைக்கு வந்தாலும், இவர்கள்தான் நம்பர்-1-ஆக இருப்பார்கள். இந்த வயதில், அனைத்துச் சவால்களையும் வென்று, சாதனை செய்திருக்கிறார்; அவரும் மிகவும் பொருத்தமானவர். இவர்களை விட சிறப்பான விருந்தினர்கள் யாரும் இருக்கவே முடியாது.

நாம் வாழும் சமூகம் – சாதி - மத – இன – மொழி– பாலின பாகுபாடு இல்லாமல், "எல்லாருக்கும் எல்லாம்" என்ற சமத்துவச் சமுதாயமாக இயங்க வேண்டும் என்பதுதான் நம்முடைய இலட்சியம்!

அதனால்தான், 2021 மே 7-ஆம் நாள், தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றவுடனே, "நம்முடைய அரசு, திராவிட மாடல் அரசு" என்று சொல்லி, ஏராளமான முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கினேன்.

நம்முடைய இலட்சியப் பயணத்தில் மிகப்பெரிய முன்னெடுப்பாக, வரலாற்றைத் திருத்தி

எழுதும் திட்டமாக அமைந்திருப்பதுதான் "கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்"! இந்தத் திட்டத்தை அறிவிக்கும்போதே, தெளிவாகச் சொல்லிவிட்டோம் – இது உதவித்தொகை இல்லை; உரிமைத்தொகை! திட்டங்கள் என்பது, கொள்கைகளின் சிந்தனைகளின் செயல்வடிவம்! ஒரு திட்டத்தின் வெற்றி என்பது, அதை வெற்றிகரமாக செயல்படுத்துவதில் மட்டுமல்ல; அந்தத் திட்டத்தைப் பொதுமக்கள் எந்தளவுக்குச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, தங்களின் வாழ்க்கைத்தரத்தை, சமூக நிலையை மேம்படுத்திக் கொள்கிறார்கள் என்பதில்தான், அந்தத் திட்டத்தின் உண்மையான வெற்றி இருக்கிறது! அந்த வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறது!

பெரும்பாலும், மாநிலத்தில் இருக்கின்ற மகளிர் "மாதம் ஆயிரம் ரூபாயைப் பெறுகிறார்கள்; விடியல் பயணத்தில், மாதந்தோறும் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் மீதமாகிறது. புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் திட்டங்களில் தங்களின் பிள்ளைகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கிடைப்பதால், அந்த வகையிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் பணப்புழக்கமும், சேமிப்பும் அதிகரித்திருக்கிறது.

இப்படித் திராவிட மாடல் அரசின் முத்திரைத் திட்டங்களை முதலீடாக மாற்றி, தங்களின் பொருளாதார வலிமையைத் தமிழ்நாட்டுப் பெண்கள் உயர்த்திக்கொள்கிறார்கள். இதைத்தான், இந்தத் திட்டத்தின் வெற்றியாக நான் பார்க்கிறேன். இது நேரடியான பலன்கள் என்றால், கையில் காசு இருப்பதால் பெண்களுக்குக் கூடும் சமூக மதிப்பு – அந்தப் பணத்தால், சத்தான காய்கறிகளை வாங்குவது – குழந்தைகளுக்கான கல்விக்குச் செலவிடுவது என்று வாழ்க்கைத்தரம் உயரவும், மறைமுகமாகவும் இது உதவிக்கொண்டு இருக்கிறது!

இங்குப் பேசியதை எல்லோரும் கேட்டீர்கள்- கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் – நன்னிலம் மகளிர் நிலவுடைமைத் திட்டம் – விடியல் பயணம் – மக்களைத் தேடி மருத்துவம் – சுய உதவிக் குழுக்கள் – வெற்றி நிச்சயம் – நலம் காக்கும் ஸ்டாலின் - பெண் தொழில் முனைவோர் – விளையாட்டு – தோழி விடுதிகள் என்று நம்முடைய திராவிட மாடல் அரசின் எண்ணற்ற திட்டங்களால் பயனடைந்த "வெல்லும் தமிழ்ப் பெண்களாக" அவர்களின் வெற்றிக்கதைகளைச் சொல்லும்போது, திராவிட இயக்கத்தின் தொண்டனாக, எனக்கு அளவில்லாத பெருமை உண்டாகியிருக்கிறது!

இந்தக் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் வெற்றியின் உச்சம் என்ன தெரியுமா? அண்டை மாநிலங்கள்கூட இந்தத் திட்டத்தை தங்களுடைய மாநிலங்களில் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள்! இன்னும் சொல்கிறேன்... மக்கள்நலத் திட்டங்களை இலவசங்கள் என்று கொச்சைப்படுத்துகின்றவர்கள் கூட இந்தத் திட்டத்தை, அவர்கள் மாநிலத்தில் செயல்படுத்தத் தொடங்கிவிட்டார்கள்.

மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், சத்தீஸ்கர், ஒடிசா, புதுச்சேரி - அதுமட்டுமல்ல, தற்போது கர்நாடகா, ஜார்கண்ட், இமாச்சலப் பிரதேசம், மேற்குவங்கம், சிக்கிம் எனப் பத்து மாநிலங்களில் உரிமைத் தொகை - மகளிர் மறுமலர்ச்சிக்கான திட்டமாக உயர்ந்து நிற்கிறது! இதையெல்லாம் நான் மேடை அலங்காரத்திற்காக, பெருமைக்காகச் சொல்கிறேன் என்று யாரும் கருதவேண்டாம்.

“பாலின வள மையம்”
திட்டத்தின் மூலம் சமுதாயத்தில் மதிப்புமிக்க பெண்ணாக உயர்ந்துள்ளேன்

இந்நிகழ்ச்சியில், பாலின வள மையத் திட்டத்தில் பயனடைந்தபயனாளிதூத்துக்குடி மாவட்டம்,சாத்தான்குளம் பகுதியைச் சேர்ந்த திருமதி பிரமிளா அவர்கள் பேசும்போது,

எனது பெயர் பிரமிளா. நான் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் பகுதியில் வசித்து வருகிறேன். எனது தந்தை எனக்கு அமைத்துக் கொடுத்த திருமண வாழ்க்கை மிகவும் மோசமாக இருந்தது. அதை நினைத்தே என் தந்தை தற்கொலை செய்து கொண்டார். இது என்னுடைய வாழ்க்கையில் மேலும் வலியை ஏற்படுத்தியது. சமுதாயத்திலும் மிகுந்த அவச் சொல்லுக்கு ஆளாகினேன். வாழ்க்கையுடன் போராடி எப்படியாவது வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே என்னைத் துரத்தியது அப்போதுதான் தமிழ்நாடு அரசின் பாலின வள மையம் குறித்து அறிந்து கொண்டேன். என்னைப் போன்ற பாதிக்கப்பட்ட பெண்களை வெளியே கொண்டுவருவதற்கு இந்தத் திட்டம் மிகவும் உதவியது.

இந்தத் திட்டத்தில் இணைந்து பிரிந்து செல்லும் நிலையில் இருந்த பல குடும்பங்களைச் சேர்த்து வைத்துள்ளோம். வயது முதிர்ந்த பெற்றோரை மீட்டு வருகிறோம். என்னுடைய வாழ்க்கையே முடிந்து விட்டது என்று நினைத்த இடத்திலேயே வாழ்க்கையை மீண்டும் தொடங்கியுள்ளேன். சமுதாயத்தில் மதிப்பு மிக்க பெண்ணாக உயர்ந்துள்ளேன். இதற்கெல்லாம் காரணம் தமிழ்நாடு அரசுதான். இந்தத் திட்டம் முன்பே தொடங்கப்பட்டிருந்தால் என்னுடைய தந்தையை நான் இழந்திருக்க மாட்டேன்.

நாம் கொண்டு வந்து செயல்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தால், சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் குறித்து, பொருளாதார அறிஞர்கள் ஆய்வு செய்து, அறிக்கையாகவே வெளியிட்டிருக்கிறார்கள்!

முன்னணி ஊடகங்கள் பலவற்றில் தலையங்கங்களும் வந்திருக்கின்றன - கட்டுரைகளும் வெளியாகியிருக்கின்றன! கடந்த ஆண்டு மார்ச் மாதம் 27-ஆம் தேதி, தினத்தந்தி பத்திரிகையில் ஒரு தலையங்கம் எழுதியிருந்தார்கள். அந்தத் தலையங்கத்தில், ஒரு கார்ட்டூனும் போட்டிருந்தார்கள்... அதில், மகளிர் சுயமரியாதையோடு வாழ, நான் மூன்று திட்டங்களைச் செயல்படுத்தியிருப்பதாகப் போட்டு, புதுமைப்பெண் திட்டம் – விடியல் பயணம் – நடுநாயகமாக இருக்கக்கூடிய கலைஞர் உரிமைத்திட்டம் ஆகிய அரியணைகளில் பெண்கள் உட்கார்ந்திருப்பதாக வரைந்திருந்தார்கள்.

அதோடு, மகளிர் சமுதாயத்தைக் கைதூக்கி விடுவதற்காக இந்தத் திட்டங்கள், காலா காலத்திற்கும் பெயர் சொல்லும் திட்டங்களாக இருக்கும்” என்று பாராட்டி எழுதியிருந்தார்கள்! இந்தப் பாராட்டுக்களை எல்லாம் தலையில் ஏற்றிக்கொள்ளாமல், நெஞ்சில் ஏந்தி, தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோர் வழங்கியிருக்கும் உணர்வோடு சொல்கிறேன்... இந்த ஆயிரம் ரூபாய் என்பது, ஒரு தொடக்கம் மட்டும்தான்!

பத்தாண்டுகள் பாழ்படுத்தப்பட்ட தமிழ்நாட்டின் வளர்ச்சியை மீட்டெடுத்து, வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு – இந்தியாவிலேயே எந்த மாநிலமும் சாதிக்காத அளவுக்குப் பொருளாதாரம் வளர்ச்சி அடையும். 16 விழுக்காடு GSDP பொருளாதார வளர்ச்சியை நம்முடைய திராவிட மாடல் அரசு சாத்தியப்படுத்தியிருக்கிறது! இந்த

வளர்ச்சியில் மகளிருக்கான பங்கு நிச்சயம் கிடைக்க வேண்டும் என்று நினைத்தேன்!

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் இதுவரைக்கும் - ஒரு கோடியே 13 இலட்சத்து 75 ஆயிரத்து 492 சகோதரிகளுக்கு மாதா மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறோம்! எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று சொன்னேன். அதற்காக, மக்களுடன் ஸ்டாலின் முகாம்கள் மூலமாக, விடுபட்ட மகளிரும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்து இன்றைக்குக் காலையில், 16 இலட்சத்து 94 ஆயிரத்து 339 பேருக்கு அக்கவுண்ட்டில் ஆயிரம் ரூபாய் போட்டுவிட்டோம்! இனிமேல், தமிழ்நாட்டில் இருக்கும் ஒரு கோடியே 30 இலட்சத்து 69 ஆயிரத்து 831 சகோதரிகளுக்கு ஆயிரம் ரூபாய் மாதா மாதம் தொடர்ந்து கிடைக்கும்!

தலைநிமிரும் தமிழ்நாட்டில், பெண்கள் உயர்ந்து நடைபோட, நிச்சயம் உரிமைத்தொகையும் உயரும்! பெண்களின் உரிமையும் உயரும்! உறுதியாகச் சொல்கிறேன்... எதிர்காலத்தில் வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்றை எழுதும்போது, "மகளிர் முன்னேற்றத்தின் புதிய அத்தியாயத்தை ஸ்டாலினுடைய திராவிட மாடல் ஆட்சியில் தொடங்கியது" என்றுதான் எழுதுவார்கள்! இந்த உரிமைத்தொகை உங்களின் உயர்வுக்கு மட்டுமல்ல – உங்கள் மகள்களின் – மகன்களின் கல்விக்குப் பயன்பட வேண்டும் என்று விரும்புகிறேன்!

கல்விதான் சிறந்த முதலீடு! யாராலும் அழிக்க முடியாத சொத்து! தலைமுறைகள் தழைக்க பெண்கள் முன்னேற்றமும், அதற்குப் பெண் கல்வியும் அவசியம்! நீங்கள் முன்னேறி வந்து, சிறகடித்துப் பறக்க வேண்டும்! ஆணும், பெண்ணும் சரிநிகர் என்று சாதனைகள் படைக்க வேண்டும்! அதற்கு, உங்கள் சகோதரனாக - உங்கள் குடும்பத்தில் ஒருவனாக இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்றைக்கும் இருப்பேன்! இருப்பேன்!

நன்றி! வணக்கம்!

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டு மகளிருடைய முன்னேற்றத்திற்காக, மற்றுமொரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாளில் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன், பெருமை அடைகின்றேன்.

திராவிட மாடல் அரசு என்றாலே அது 'பெண்களுக்கான அரசு' என்று தான் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பெண்கள் மட்டுமல்ல,

பெண்கள் பெரிதளவில் முன்னேற்றம் அடைந்த அரசின் சிறப்புமிகு திட்டமான “மகளிர் விடியல் பயணம் திட்டம்”

இந்நிகழ்ச்சியில், மகளிர் விடியல் பயணத் திட்டத்தில் பயனடைந்த பயனாளி திருச்சிராப்பள்ளி மாவட்டம், எடமலைப்பட்டி புதூரைச் சேர்ந்த திருமதி பர்கத் நிஷா அவர்கள் பேசும்போது,

எனது பெயர் பர்கத் நிஷா. நான் திருச்சிராப்பள்ளி மாவட்டம், எடமலைப்பட்டி புதூரில் வசித்து வருகிறேன். எனது ஊர் கிராமப்பகுதி என்பதால் கூலி வேலைக்குச் செல்லும் போது 300 ரூபாய் அன்றாடம் கிடைக்கும். இதில், பஸ் டிக்கெட்டுக்கே 60 ரூபாய் செலவாகிவிடும். தமிழ்நாடு அரசு விடியல் பயணம் திட்டத்தைக் கொண்டுவந்த பின்னர் அரசு பஸ்சில் இலவசமாகவே சென்று வருகிறேன். சம்பளப் பணத்தை அப்படியே வீட்டிற்குக் கொண்டு வருகிறேன்.

இதன் மூலம் மாதத்தோறும் 1,800 ரூபாய் முதல் 2,000 ரூபாய் வரையில் மிச்சமாகிறது. என்னுடைய கணவருக்கு ஆஸ்துமா பிரச்சினை இருப்பதால் பஸ்சிற்கு செலவாகும் தொகையைச் சேமித்து வைத்து அவருக்கு மருந்து வாங்கித் தருகிறேன். தமிழ்நாடு அரசின் சிறப்பான திட்டங்களால் பெண்கள் பெரிதளவில் முன்னேற்றம் அடைந்துள்ளர்கள். இது மறுக்க முடியாத உண்மை.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஆண்கள் மட்டுமல்ல, இன்றைக்கு ஒட்டுமொத்த இந்திய ஒன்றியமே இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறது.

அதற்குக் காரணம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு திட்டத்தையும் கொண்டுவரும்போதும், அதில் மகளிர் முன்னேற்றத்தை மனதில் வைத்துச் செயல்படுத்தி வருகின்றார்.

இன்றைக்குப் பெண்கள் பல துறைகளில் முன்னேறி வருகின்றதையும், சாதிப்பதையும் பார்க்கும்போது,

நாம் ஒவ்வொருவரும் இதுதான் எங்கள் தமிழ்நாடு, இதுதான் எங்கள் தமிழ்ப்பெண் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளும் அளவிற்கு நம்முடைய மாநிலம் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்றைக்குப் பெண்ணுரிமையில், இந்தியாவிற்கே, தமிழ்நாடுதான், முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் மற்ற மாநிலங்கள் எல்லாம், பெண்களுக்கு உரிமையைத் தரவேண்டும் என்று பேசிக்கொண்டு இருக்கும்போது, உங்களுக்கு ‘உரிமை’ என்பதைத் தாண்டி, ‘அதிகாரத்தைக்’ கொடுத்திருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு, நம்முடைய திராவிட மாடல் அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

தந்தை பெரியார் அவர்களிடம் சென்று ஒருமுறை, “நீங்கள் பெண்ணுரிமைப் பற்றிப் பேசுகிறீர்களே, பெண்களுக்கு என்னென்ன உரிமை எல்லாம் கொடுக்க வேண்டும்?” என்று ஒருவர் கேட்டார். அதற்கு, தந்தை பெரியார் அவர்கள், ரொம்ப எளிமையாகச் சொன்னார், “ஆணுக்கு என்னென்ன உரிமைகள் எல்லாம் இருக்கின்றதோ, அது எல்லாமும் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும்” என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்.

பெண் அடிமைத்தனம் ஒழிய வேண்டும் என்றால், 2 விசயங்கள் முதலில் நடக்க வேண்டும்

என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். ஒன்று பெண்களுக்குச் சொத்துரிமை வரவேண்டும். இரண்டாவது, பெண்களுக்குக் கல்வியும், வேலையும் கிடைக்க வேண்டும் என்று சொன்னார். இந்த இரண்டையுமே செய்து காட்டிய பெருமை கழக அரசுக்கு உண்டு.

1989-இல் இந்தியாவிலேயே பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சம உரிமை உண்டு என்று சட்டம் கொண்டு வந்தவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்தியாவிலேயே முதன்முதலாக, மகளிர் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள். காவல்துறையில் இந்தியாவிலேயே முதன் முதலாகப் பெண்களை நியமனம் செய்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அவர் வழியில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இன்றைக்குப் பெண்களுக்கான பல அடுக்கடுக்கான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார்.

2021இல் தான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்றே, அவர் போட்ட முதல் கையெழுத்து மகளிர்க்கான விடியல் பயணத் திட்டத்திற்கான கையெழுத்து ஆகும்.

முன்பெல்லாம், வேலைக்கு வெளியில் செல்வது ஆண்களுடைய விசயமாக இருந்தது. ஒரு வீட்டில் வேலை செய்கின்றவர் அந்தக் குடும்பத்தினுடைய ஆண்களாக மட்டுமே இருப்பார்கள். பெண்கள் வீட்டு வேலை செய்வதுதான் மிக முக்கியமான வேலையாக, ஒரு பொறுப்பாக இருக்கும். இதற்கு ஒரு பழமொழியும் உண்டு, அதுதான் 'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்று சொல்வார்கள். உத்தியோகம் புருஷனுக்கு மட்டும் லட்சணம் கிடையாது. இன்றைக்கு உத்தியோகம் பெண்களுக்கும் லட்சணம் என்று மாற்றிக் காட்டிய அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு.

அதனால் தான், இன்றைக்கு, இந்தியா முழுவதும் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கின்ற பெண்களில் 43 சதவீதம் பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்கள் என்ற பெருமையோடு இன்றைக்கு நம்முடைய மாநிலம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

குடும்பத் தலைவிகளின் உழைப்பை இந்திய வரலாற்றிலேயே முதன்முதலில் அங்கீகரித்த அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த, அந்த முற்போக்கான திட்டத்திற்குப் பெயர்தான் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்.'

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த இந்தத் திட்டத்தை, இன்றைக்குப் பல மாநிலங்கள் பின்பற்றி வருகின்றன. ஆனால், அந்த மாநிலங்கள் எல்லாம் இதை உரிமைத் தொகை என்று சொல்லவில்லை. தமிழ்நாடு மட்டும்தான்,

உதவித்தொகையாகப் பார்க்காமல், சலுகைத் தொகையாகப் பார்க்காமல் பெண்களுடைய உரிமையாக இந்தத் திட்டத்தைப் பார்த்தது.

வெற்றி எனக்கு நிஜமாகவே கிடைத்த
“வெற்றி நிச்சயம் திட்டம்”

இந்நிகழ்ச்சியில், வெற்றி நிச்சயம் திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளி திருவண்ணாமலை மாவட்டம், இலங்கைத் தமிழர்கள் வாழ் மறுவாழ்வு முகாமை சேர்ந்த செல்வி சாரா அவர்கள் பேசும்போது,

எனது பெயர் சாரா. நான் திருவண்ணாமலை மாவட்டம், இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் வசித்து வருகிறேன். நாங்கள் அரிசி குடோன் அருகில் உள்ள பிளைவுட் சீட் வீட்டில் பத்துக்குப் பத்து என்ற அளவில் வசித்து வந்தோம். பள்ளிக்குச் சென்று கழிவறை செல்வேன். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எங்களுக்குக் கழிவறை வசதியுடன் தச்சூரில் அரசு வீடு கட்டிக்கொடுத்து இருக்கிறது. வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி மூலம் ஆரி வகுப்புச் சென்றேன். இப்போது வீட்டில் இருந்து வருமானம் கிடைக்கிறது. வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி மூலம் எனக்கு வெற்றி நிஜமாகக் கிடைத்து இருக்கிறது. அதனால்தான் நான் இங்கு நிற்கிறேன்.

இப்போது, ஏற்கனவே இருந்த விதிகளையெல்லாம் தளர்த்தி, கூடுதலான மகளிருக்குப் பயனளிக்கின்ற வகையில், இந்தத் திட்டத்தை இன்றிலிருந்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவுபடுத்தி இருக்கிறார்கள்.

இதுமட்டுமல்லாமல், புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், தாயுமானவர் திட்டம், தோழி விடுதிகள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் என்று மகளிருக்காக ஏராளமான திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கின்றார்.

விளையாட்டுத் துறையிலும் தேசிய, சர்வதேசப் போட்டிகளில் தமிழ்நாட்டு வீராங்கனைகள் இன்றைக்குத் தொடர்ந்து சாதனைகளைப் படைத்துக்கொண்டு வருகிறார்கள்.

அதற்கு ஓர் சிறந்த உதாரணம் தான், இங்கே மேடையில் உங்கள் முன்பு அமர்ந்திருக்கக்கூடிய என்னுடைய தங்கை துளசிமதி முருகேசன் அவர்கள். காஞ்சிபுரத்தில் ஓர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த, மாற்றுத்திறனாளிதான்

தங்கை துளசிமதி அவர்கள். தன்னுடைய, தன்னம்பிக்கையாலும், விடாமுயற்சியாலும், இன்றைக்கு உலக அளவில் Para-Badmintonஇல் பல்வேறு சாதனைகளைத் தொடர்ந்து படைத்துக் கொண்டு வருகிறார் தங்கை அவர்கள்.

சமீபத்தில் பாரிஸில் நடந்த பாரா ஒலிம்பிக்கில் Silver Medal வென்று இன்றைக்குத் தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்த தங்கைதான் துளசிமதி முருகேசன் அவர்கள். அதன் மூலமாக, Paralympic-ல finals வரை சென்ற முதல் இந்திய para-badminton வீராங்கனை என்கின்ற பெருமை அவர்களுக்குச் சேரும். அதுமட்டுமல்ல, நம்முடைய அரசு சார்பாக, சமீபத்தில் கல்பனா சாவ்லா விருதையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தங்கைக்குக் கொடுத்திருந்தார்கள்.

மாற்றுத்திறனாளி என்பதைத் தாண்டி, பலருடைய வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் அளவிற்கு, தங்கை துளசிமதி மற்றவர்களுக்கும் ஒரு Role Model-ஆக, Inspiration-ஆக இருக்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதே மாதிரி, இந்த விழாவில், மரியாதைக்குரிய சமூக சேவகர் பத்மஸ்ரீ கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவர்கள் வந்திருக்கிறார்கள். 11 வயதில் தன்னுடைய சமூகப் பணிகளைத் தொடங்கிய அம்மையார் அவர்கள், இன்றைக்கு 101 வயதைத் தாண்டிய நிலையிலும், தனது களப்போராட்டத்தில் அதே உறுதியோடு நிற்கின்றார்.

குறிப்பாக, களப்போராட்டம், சட்டப் போராட்டம் மூலமாகப் பல ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஒடுக்கப்பட்டோர், மகளிர் பெயரில் பெற்றுத் தந்த பெருமைக்குரியவர்தான் அம்மையார் அவர்கள்.

இந்தியாவில் எந்த மூலையில், ஒடுக்கப்பட்ட மக்கள், மகளிர் பாதிக்கப்படுகிறார்களோ, அங்கெல்லாம் சென்று அவர்களுடைய உரிமைகளை இன்றும் நிலைநாட்டி வருகின்றார். அம்மையார் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவர்களுடைய பணிகள் நிச்சயம் அனைவரையும் வழிநடத்தும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிக்கு தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன்.

வந்திருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களையும், அண்ணன் சேகர்பாபு அவர்களையும்,

வணக்கத்திற்குரிய மேயர் சகோதரி பிரியா ராஜன் அவர்களையும்,

வந்திருக்கக்கூடிய மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு அவர்கள் உள்ளிட்ட, அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும்,

தமிழ்நாடு அரசினுடைய தலைமைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம் ஐ.ஏ.எஸ் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களையும்,

மதிப்பிற்குரிய துணை மேயர் அண்ணன் மகேஷ்குமார் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுடைய பிரதிநிதிகளையும், சமூகச் சேவகர் திருமிகு கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவர்களையும், தங்கை துளசிமதி முருகேசன் அவர்களையும்,

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை எல்லாம் இங்கே பகிர்ந்து கொண்ட பயனாளிகள், திரையுலகினைச் சேர்ந்த என்னுடைய நண்பர்கள், சிறப்பு விருந்தினர்கள் அத்தனை பேரையும்,

என்னுடைய அன்புக்கும், பாசத்திற்கும் உரிய அருமைத் தாய்மார்களையும், சகோதரிகளையும்,

பத்திரிகை நண்பர்கள் உங்கள் அத்தனைபேரையும், வருக, வருக என அன்போடு வரவேற்று விடைபெறுகின்றேன்.

நம்முடைய திராவிட மாடல் அரசினுடைய திட்டங்களால், வெல்லும் தமிழ்ப்பெண்கள், இன்னும் பல உயரங்களைத் தொட என்னுடைய அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி

மதுரை மாவட்டத்தில்

ரூ.417.43 கோடி மதிப்பீட்டில் 1,77,562 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.12.2025 அன்று மதுரை மாவட்டம், உத்தங்குடி, கலைஞர் திடலில் நடைபெற்ற அரசு விழாவில், 2,630 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவிலான 63 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, 17 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 7 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் 1,77,562 பயனாளிகளுக்கு 417 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மதுரை மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப்பணிகளின் விவரங்கள்

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், மதுரை-தொண்டி சாலை மேலமடை சந்திப்பில் 150 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் சந்திப்பு மேம்பாலம்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், மதுரை மாநகராட்சியில் 464 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் முல்லைப் பெரியாறு லோயர் கேம்ப் பகுதியில் நீரேற்று நிலையத்துடன் பண்ணைப்பட்டி வரை குழாய்கள், 131 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் பண்ணைப்பட்டியில் குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையம், 720 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் பண்ணைப்பட்டி முதல் மதுரை மாநகர் வரை அமைக்கப்பட்டுள்ள குழாய்கள், நகர் பகுதியில் 38 புதிய குடிநீர்த் தொட்டிகள், 293 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் மதுரை மாநகராட்சியில் கூடுதலாக இணைக்கப்பட்ட 28 வார்டுகளில் குடிநீர் விநியோகக் குழாய்கள், வீட்டு இணைப்புகள், 461 கோடி ரூபாய் செலவில் மதுரை மாநகராட்சி மையப் பகுதியில் உள்ள 57 வார்டுகளில் குடிநீர் விநியோகக் குழாய்கள், வீட்டு இணைப்புகள், அலங்காநல்லூர் – வலசை சாலையில் 2 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் மேம்பாலம், அலங்காநல்லூர் – ஆஸ்பத்திரி சாலை, வலசை ஆகிய இடங்களில் 1 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் சமுதாய நலக் கூடங்கள், சோழவந்தானில் 53 இலட்சம் ரூபாய் செலவில் சோழவந்தான் பேரூராட்சி அலுவலகக் கட்டடம், மேலூர் நகராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் 9 கோடியே 20 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் பூங்கா, குளங்கள், 26 கட்டடங்களுடன் மேம்பாட்டுப் பணிகள்;

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், மேலூர், கொட்டாம்பட்டி ஒன்றியங்களுக்குட்பட்ட 88 ஊரக குடியிருப்புகளுக்கு 127 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவிலும், 240 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் டி.கல்லுப்பட்டி, சேடப்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட 236 ஊரக குடியிருப்புகளுக்குப் புதிய கூட்டுக்குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத்திட்டம்;

பள்ளிக் கல்வித் துறை சார்பில், திருப்பரங்குன்றம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 2 கோடியே 96 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவில் 14 வகுப்பறைக் கட்டடங்கள், அய்யூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 2 கோடியே 35 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் 9 வகுப்பறைக் கட்டடங்கள், ஆண்கள், பெண்கள் கழிப்பறைகள், குடிநீர் வசதிகள், அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 61 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் கூடுதல் கட்டடம், டி.வாடிப்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஒத்தக்கடை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பி.அம்மாப்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் 3 கோடியே 53 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், சந்தையூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 1 கோடியே 64 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் ஆறு வகுப்பறைக் கட்டடங்கள், ஆண்கள், பெண்கள் கழிப்பறைகள், குடிநீர் வசதிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்தில் 2 கோடி ரூபாய் செலவில் திட்ட இயக்குநர் முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு, ஒத்தக்கடையில் 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் மயான எரிவாயு தகனமேடை, உச்சப்பட்டியில் 5 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், துள்ளுகுட்டி நாயக்கனூரில் 45 இலட்சம் ரூபாய் செலவில் துணை சுகாதார வளாகம், குறிச்சிப்பட்டியில் 80 இலட்சம் ரூபாய் செலவில் சமுதாயக் கூடம், கருங்காலக்குடியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் ஊரக சுகாதார வளாகம், குருவித் துறையில் 10 இலட்சம் ரூபாய் செலவில் மதி அங்காடி;

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், திருமங்கலம்-அண்ணாநகர், முஸ்லீம் ஆண்கள் பள்ளி, சத்திரப்பட்டி, குலமங்கலம் ஆகிய இடங்களில் 70 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் அங்கன்வாடி மையங்கள்;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், தல்லாகுளம் கால்நடை பன்முக மருத்துவமனை வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் உறை விந்து சேமிப்பு வங்கி, மேலூர் கால்நடை மருத்துமனையில் 89 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய கட்டடம்;

வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில், சோழவந்தானில் 1 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் சார்பதிவாளர் அலுவலகம்;

இயற்கை வளங்கள் துறை சார்பில், 2 கோடி ரூபாய் செலவில் புவியியல் மற்றும் சுரங்கத் துறை மதுரை மண்டல இணை இயக்குநர் அலுவலகம்;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், எழுமலையில் 35 இலட்சம் ரூபாய் செலவில் குடியிருப்புடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகம்;

போக்குவரத்துத் துறை சார்பில், மதுரை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அம்மா ஓட்டுநர் பயிற்சி பள்ளிக் கட்டடத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சியாளர்கள் தங்கும் விடுதிகளுக்குக் கூடுதல் தளம், 13 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்பட்ட அரசு தானியங்கி பணிமனை;

என மொத்தம், 2,630 கோடியே 87 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவிலான 63 முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மதுரை மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்

கூட்டுறவுத் துறை சார்பில், கீழையூர், தும்பைப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள், வாடிப்பட்டி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்குச் சேவை மையம், கே.வெள்ளாகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 1 கோடியே 97 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 1,000 மெ.டன். கொள்ளளவு கொண்ட மிகப்பெரிய சேமிப்புக் கூடம்;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், தல்லாகுளம் கால்நடை பன்முக மருத்துவமனை வளாகத்தில் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கால்நடைப் பன்முக மருத்துவமனை;

சுற்றுலாத் துறை சார்பில், குட்லாடம்பட்டி அருவிப் பகுதியில் 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், மேலூர் நகராட்சியில் 8 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள்;

என மொத்தம், 17 கோடியே 17 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 7 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மதுரை மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், 7,784 பயனாளிகளுக்கு நத்தம் வீட்டுமனைப் பட்டாக்கள், நத்தம் நிலவரி திட்டத்தின்கீழ் 2,880 பயனாளிகளுக்குப் பட்டாக்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின்

மூலம் 3,400 பயனாளிகளுக்குப் பட்டாக்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 1,376 பயனாளிகளுக்கு பட்டாக்கள், நகர நிலவரித் திட்டத்தின் கீழ் 28,424 பயனாளிகளுக்குப் பட்டாக்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் 2,437 பயனாளிகளுக்குப்பட்டாக்கள்,பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை மூலம் 1,099 பயனாளிகளுக்குப் பட்டாக்கள், உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் மூலம் 12,236 பயனாளிகளுக்கு உட்பிரிவுடைய பட்டாக்கள், 4,062 பயனாளிகளுக்கு உட்பிரிவற்ற பட்டாக்கள் என பல்வேறு துறைகளின் மூலம் மொத்தம் 1,00,211 பயனாளிகளுக்கு பட்டாக்கள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 1,000 பயனாளிகளுக்குக் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடுகள், 61,433 பயனாளிகளுக்குத் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் கடனுதவிகள்;

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், 260 பயனாளிகளுக்குப் பெண் ஓட்டுநர், திருநங்கைகளுக்கு ஆட்டோக்கள், இ-ஸ்கூட்டர் மானியம்;

வேளாண்மை-உழவர் நலத் துறை சார்பில், 712 பயனாளிகளுக்கு வணிக விரிவாக்க மானியம், நடமாடும் காய்கறி விற்பனை வண்டி, பவர் டில்லர், பவர் வீடர், பேட்டரி தெளிப்பான், விசை தெளிப்பான், உழவர் நல சேவை மையம், ஆழ்துளைக் குழாய் கிணறு, புதிய மின் மோட்டார், சூரியக் கூடார உலர்த்தி, சோலார் பம்ப்செட், வெங்காய சேமிப்புக் கூடம், நிரந்தரப் பந்தல் அமைப்பு, நிழல்வலைக் குடில் டிராக்டர், உபகரணங்கள் ஆகியவற்றிற்கான மானியத்துடன் கூடிய கடனுதவிகள், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், மதிப்புக்கூட்டு மையம், தொழில் முனைவோர் திட்டம் ஆகியவற்றின்கீழ் உதவிகள்;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், 735 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி, மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம், திறன்பேசிகள், மூன்று சக்கர சைக்கிள், மூளை முடக்கு வாதத்தில் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்புச் சக்கர நாற்காலிகள்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில், 52 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரம், தேய்ப்புப் பெட்டிகள், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ்ப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஓய்வூதியம், பணி நியமன ஆணைகள்;

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில், 134 பயனாளிகளுக்கு மின்மோட்டாருடன் கூடிய விலையில்லாத் தையல் இயந்திரம், தேய்ப்புப் பெட்டிகள்; தாட்கோ சார்பில், 97 பயனாளிகளுக்கு வாகனங்களுக்கான கடனுதவிகள், பிரதான் மந்திரி அனுசூசித் ஜாதி அபியுதாப் யோஜனா திட்டத்தின்கீழ்க் கடனுதவிகள்;

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில், 16 பயனாளிகளுக்கு 250 கோழிகள்/நாட்டுக் கோழிப்பண்ணை அலகுகள் நிறுவ 50 விழுக்காடு மானியத்துடன் உதவிகள், கொல்லைப்புற, நடுத்தர மற்றும் ஒருங்கிணைந்த அலங்கார மீன்வளர்ப்புத் திட்டங்கள், புதிய மீன்வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம் ஆகியவற்றின்கீழ் உதவிகள்;

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், 11,476 பயனாளிகளுக்குப் பயிர்க்கடன், கால்நடைப் பராமரிப்புக் கடன், சுய உதவிக் குழு கடன், மாற்றுத் திறனாளிகள் கடன், சிறுபான்மையினர் நலக் கடன், பிற்படுத்தப்பட்டோர் நலக் கடன், புதிய குடும்ப அட்டைகள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 1,010 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவானத் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் உதவிகள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தாய், சேய் நலப் பெட்டகங்கள்;

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், 50 பயனாளிகளுக்கு வாகனங்களுக்கான கடனுதவிகள், கலைஞர் கைவினைத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் ஆகியவற்றின் கீழ் உதவிகள்;

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், 316 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், திருமண உதவித் தொகை வழங்குதல் ஆகியவற்றின்கீழ் உதவிகள்;

வனத் துறை சார்பில், 10 பயனாளிகளுக்கு பழங்குடியினர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் உதவிகள்;

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், 50 பயனாளிகளுக்கு உச்சப்பட்டி தோப்பூர் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகள்;

எனப் பல்வேறு துறைகளின் சார்பில், மொத்தம் 417 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 1,77,562 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பிறந்த நாள்

படமும்/செய்தியும்

தமிழ்நாடு அரசின் சார்பில், 10.12.2025 அன்று மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 147-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை பாரிமுனை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் திரு.மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 07.12.2025 அன்று மதுரையில் நடைபெற்ற TN Rising முதலீட்டாளர்கள் மாநாட்டில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் ரூ.35,560.15 கோடி முதலீட்டில், 52,060 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 46 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில், ரூ.1,100.20 கோடி முதலீட்டில் 4,706 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் 45 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், என மொத்தம், ரூ.36,660.35 கோடி முதலீட்டில் 56,766 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

முதலீட்டாளர் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் சில முக்கிய திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

1) Pei Hai குழுமம் : தைவான் நாட்டைச் சேர்ந்த Pei Hai குழுமம், தோல் அல்லாத காலணிகள் உற்பத்தித் திட்டத்தினை மதுரையில் நிறுவிட உள்ளது. இதன்மூலம், 15,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். இதில் பெரும்பாலான வேலைவாய்ப்புகள் மகளிருக்கானவை ஆகும்.

2) Hyundai நிறுவனம் : ஒரு கப்பல் கட்டுமானத் திட்டத்தை நிறுவிட உள்ளது. கப்பல் கட்டுமானத் துறையில், தமிழ்நாடு நல்ல முன்னேற்றம் அடைந்துவரும் இத்தருணத்தில், இத்தகைய முதலீடு, மற்ற நிறுவனங்களை ஊக்குவிப்பதோடு மட்டுமின்றி, உபபாகங்கள் உற்பத்தி நிறுவனங்களையும் ஈர்க்கத்தகுந்த வகையில் இருந்திடும்.

3) SFO Technologies: பொறியியல், மின்னணுவியல், தகவல்தொழில்நுட்ப தீர்வுகளில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான இந்நிறுவனம், மின்னணு உபபாகங்கள்

உற்பத்திக்கான விரிவாக்கத் திட்டத்தைத் தேனியில் மேற்கொள்ள உள்ளது.

4) Reliance Industries: தென் மாவட்டங்களில், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், உயிர் எரிசக்தித்துறையில் (Bio Energy) ரூ.11,000 கோடி முதலீடு மேற்கொள்ள உள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் ரூ.1,100.20 கோடி முதலீட்டில் 4,706 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் 45 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இம்மாநாட்டின் பிற முக்கிய நிகழ்வுகள்

சிப்காட் மேலூர் தொழிற்பூங்காவிற்கு அடிக்கல் நாட்டுதல்

மதுரையின் தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்தும் வகையிலும், புதிய முதலீடுகளுக்கும் வேலைவாய்ப்புகளுக்கும் ஒருதளம் அமைத்துத்தரும் வகையிலும், மதுரை மேலூரில் 278.26 ஏக்கர் பரப்பளவில் உலகத் தரத்திற்குரிய அடிப்படை வசதிகள், நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்ற சிறந்த சூழலமைப்புடன் ஒரு தொழிற்பூங்கா சிப்காட் மூலம் உருவாக்கப்பட உள்ளது. இத்தொழிற் பூங்கா அமைக்கும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மதுரை மாஸ்டர் பிளான் 2044 வெளியீடு

பாரம்பரியம் மற்றும் புதிய வாய்ப்புகள் இணையும் முன்னோடியான நகரமாக மதுரை வளர்ச்சிப் பெறவேண்டும் என்ற வகையில், 42 லட்சம் மக்கள்தொகையை எதிர்நோக்கி, நகர ஊரமைப்பு இயக்ககம் (DTCP) தயாரித்துள்ள "மதுரை மாஸ்டர் பிளான் – 2044" னை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

'தமிழ்நாடு பொம்மைகள் உற்பத்திக் கொள்கை 2025' வெளியீடு

உயர்தர மற்றும் நிலைத்தன்மை கொண்ட பொம்மைகள் உற்பத்தியில் தமிழ்நாட்டை முன்னணி மையமாக மேம்படுத்தும் வகையிலும், விளாச்சேரி, தஞ்சாவூர், அம்பாசமுத்திரம் போன்ற பகுதிகளில் உள்ள கைவினைக் கலைஞர்களின் பாரம்பரிய பொம்மைகள் உற்பத்தித்திறனை உயர்த்தும் வகையிலும், அவர்களுக்குப் புதிய சந்தை, வடிவமைப்பு, முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'தமிழ்நாடு பொம்மைகள் உற்பத்திக் கொள்கை 2025'னை வெளியிட்டார்.

கூட்டு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி

தொழில் மற்றும் கல்வித்துறை ஒத்துழைப்புடன் அறிவுப் பொருளாதாரத்தை உருவாக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு அமைத்துள்ள 'தமிழ்நாடு அரசு பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பூங்கா அறக்கட்டளை' என்ற நிறுவனம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், அப்பகுதியிலுள்ள முக்கிய நிறுவனங்களுடன் இணைந்து, புதுமையான ஆராய்ச்சி திட்டங்கள், புதிய தயாரிப்பு மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கான ஆராய்ச்சித் திட்டங்களுக்கு 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கிறது. இந்தத் திட்டங்களுக்கு முதல் தவணையாக 75 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆராய்ச்சியாளர்களிடம் வழங்கப்பட்டது.

உணவுப் பதப்படுத்துதல் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், வேளாண், உணவுப் பதப்படுத்தும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் வகையிலும், தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல், வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEX) இன்று, இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின்கீழ் செயல்படும் ஒன்பது முக்கிய தேசிய நிறுவனங்கள், மைசூருவில் செயல்பட்டு வரும் மத்திய உணவுத் தொழில் ஆராய்ச்சி நிறுவனத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டது.

பணிநியமன ஆணைகள் வழங்குதல்

ஐந்து தொழில் நிறுவனங்களின் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட 2,22,91,710 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு "பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000 வழங்கும் திட்டம்"

சிறப்புமிக்க தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2,22,91,710 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000/- வழங்கப்படும்" எனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மேலும், பொங்கல் பண்டிகையையொட்டி வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திடும் வகையில், 1 கோடியே 77 இலட்சத்து 64 ஆயிரம் சேலைகள் மற்றும் 1 கோடியே 77 இலட்சத்து 22 ஆயிரம் வேட்டிகள் வழங்கிட தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் மக்கள் பயன்பெறுவதோடு, கைத்தறி, விசைத்தறி தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.

அதன்படி, பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.3,000/- ரொக்கம் ஆகியவற்றை வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.01.2026 அன்று சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன்பெறுவார்கள். பொங்கல் பரிசுத் தொகுப்பு, ரொக்கப் பரிசு மற்றும் வேட்டி-சேலைகள் ஆகியவை மொத்தம் 7,604 கோடியே 29 இலட்சத்து 47 ஆயிரத்து 959 ரூபாய் செலவில் வழங்கப்படுகிறது.

மதுரை, மேலமடையில் ரூ.150 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 4 வழித்தடச் சாலை சந்திப்பு மேம்பாலத்திற்கு "வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்" என்று பெயர் சூட்டல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்- 07.12.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.12.2025 அன்று மதுரை மாவட்டம், சிவகங்கை சாலை மேலமடை சந்திப்புப் பகுதியில் 150 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 வழித்தடச் சாலை சந்திப்பு மேம்பாலத்திற்கு "வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்" என்று பெயர் சூட்டி, பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.

மதுரை – தொண்டி சாலை (SH 33) மதுரை மாவட்டத்தில் உள்ள முக்கியமான மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலையானது மதுரை மாநகரிலிருந்து சிவகங்கை செல்வதற்கும் மதுரை வட்டச்சாலையை அணுகுவதற்கும் பயன்படுவதால் மேலமடை சந்திப்பில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

மதுரை மாநகருக்குள் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க பல்வேறு இடங்களில் சாலை மேம்பாலம், உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.01.2022 அன்று மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் அறிவித்தார்.

அதன்படி மதுரை – தொண்டி சாலையில் உள்ள மேலமடை சந்திப்பில் சாலை மேம்பாலம் ஒன்று அமைப்பதற்கும், மிகவும் நெரிசல் மிகுந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஆவின், மேலமடை சந்திப்பு ஆகிய இடங்களில் போக்குவரத்து சிக்னலை அப்புறப்படுத்தி அப்பகுதியினை அகலப்படுத்தி வட்ட வடிவச் சந்திப்பு அமைப்பதற்கும் 150.28 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிகளுக்கு 30.10.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதன் தொடர்ச்சியாக, மதுரை மாவட்டம், மேலமடைச் சந்திப்பில் 950 மீட்டர் நீளத்திற்கு நான்கு வழித்தடச் சாலை மேம்பாலம் கட்டப்பட்டு, மேலமடைச் சந்திப்பு, ஆவின் சந்திப்பு, மாவட்ட ஆட்சியர் அலுவலக சந்திப்பு ஆகிய 3 சந்திப்புகளிலும் ரவுண்டானாவுடன் கூடிய சாலை சந்திப்பு மேம்பாடு செய்யப்பட்டு, பாலத்தின் இருபுறமும் தலா 7.50 மீட்டர் அகலமுள்ள 2 வழித்தட சேவைச் சாலைகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சந்திப்பு முதல் மேம்பாலம் வரை தலா 7.5 மீட்டர் அகலமுள்ள நான்கு வழித்தடச் சாலைகள், மூன்று சாலை சந்திப்புகள் மேம்பாடு, சந்திப்புகளில் சிக்னல் இல்லா பயணம், தடையில்லா இடதுபுறம் திரும்புதல் (Free Left), பேருந்து நிறுத்தத்திற்குத் தனி இடவசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இச்சாலை சந்திப்பு மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. இம்மேம்பாலத்திற்கு "வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்" என்று பெயர் சூட்டப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதன்படி, வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இதன் மூலம், சிவகங்கை சாலையில் கோரிப்பாளையம் முதல் சுற்றுச்சாலை வரை போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, பயண நேரமும் 15 நிமிடத்திலிருந்து 5 நிமிடமாகக் குறையும்.

படமும் / செய்தியும்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மண்டல இணை இயக்குநர்களுக்கான பணி ஆய்வுக் கூட்டம்

சென்னை கலைவாணர் அரங்க வளாகத்திலுள்ள மாநிலச் செய்தி நிலையக் கூட்டரங்கில், 11.12.2025 அன்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மண்டல இணை இயக்குநர்களுக்கான பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறைக் கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு.ச.செல்வராஜ், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) முனைவர் இரா. பாஸ்கரன், உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஜனவரி 23: நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் பிறந்த நாள்

“நேதாஜி”

1943 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 ஆம் நாள் ஜெர்மனியை விட்டுப் புறப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் 1943 ஜூன் 13ஆம் நாள் டோக்கியோ சென்றடைந்தார். ஜப்பான் பிரதமர், இங்கிலாந்தைத் தோற்கடித்ததும், இந்தியாவிற்குச் சுதந்திரம் தருவதாக ஜப்பான் பாராளுமன்றத்தில் அறிவித்தார். சிங்கப்பூருக்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் வந்தவுடன் ராஷ் பிகாரி போஸ் அவரிடம் அனைத்துப் பொறுப்புகளையும் ஒப்படைத்தார். 5,000 இந்தியர்கள் முன்னிலையில் இந்தியத் தேசிய இராணுவத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அப்போதுதான் இவருக்கு ‘நேதாஜி’ என்ற பட்டம் வழங்கப்பட்டது. அடுத்த நாள் இந்தியத் தேசிய இராணுவத்தைப் பார்வையிட்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் “டெல்லியை நோக்கிச் செல்” என்ற முழக்கத்தைக் கொடுத்தார். ஜூலை 6 ஆம் நாள் இந்தியத் தேசியப்படையின் அணிவகுப்பைப் பார்வையிட வருமாறு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்று ஜப்பான் பிரதமர் தோஜோ அவர்கள் வருகை தந்து அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

1943ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21ஆம் நாள் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள், இந்தியத் சுதந்திர அரசாங்கத்தை அமைத்து, அவ் அரசாங்கத்தின் பிரதமரானார். 1943 நவம்பர் 6 ஆம் நாள் அந்தமான், நிக்கோபார் தீவுகளை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் அரசாங்கத்திடம் ஒப்படைப்பதாக ஜப்பான் பிரதமர் தோஜோ அவர்கள் அறிவித்தார். சுதந்திர இந்தியாவின் முதல் நிலப்பகுதியை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் வென்றார்.

1944ஆம் ஆண்டு பிப்ரவரி 4ஆம் நாள் முதல் படைவரிசை, ரங்கூனை விட்டுப் புறப்பட்டுக் காலான் ஆற்றங்கரையில் உள்ள கயுக்டவ் என்ற இடத்தை அடைந்தது. இங்கு இங்கிலாந்து இராணுவத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற நீக்ரோ வீரர்களைத் தோற்கடித்தனர். அதையடுத்து பலேட்வா, டேல்ட்மியிலிருந்து 40 மைல் தூரத்திலிருந்த இந்திய எல்லையைக் கண்டனர். அங்கு மௌடக் என்னுமிடத்தில் இருந்து இங்கிலாந்துப் படைகளை இரவோடு இரவாக விரட்டியடித்தனர். ஆங்கிலேயர்கள் ஏராளமாகக் குவித்திருந்த ஆயுதங்களையும், உணவுப் பொருட்களையும் அப்படியே போட்டுவிட்டுத் தலைதெறிக்க ஓடிவிட்டனர். வெற்றிக்களிப்பில் இந்தியத் தேசிய இராணுவம் இந்தியாவிற்குள் காலெடுத்து வைத்தது. படைவீரர்கள் மண்ணில் முத்தமிட்டு மகிழ்ந்தனர். இந்தியத் தேசியக் கொடியை ஏற்றி வைத்துத் தேசிய கீதத்தை உணர்ச்சி மயமாகப் பாடினார்.

— தமிழரசு

ரூ.125 கோடி ஒதுக்கீட்டில் மாற்றுத்திறனாளிகளின் இருப்பிடத்திற்கே சென்று, அவர்களின் மறுவாழ்வு சிகிக்சைக்கான பயிற்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
வழங்கினார் - 03-12.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 03.12.2025 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், உலக மாற்றுத்திறனாளிகள் தினம் 2025-யை முன்னிட்டு நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளில் நியமிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் அறிமுக விழாவில், 400 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலிகள், சக்கர நாற்காலியாகவும் மூன்று சக்கர வாகனமாகவும் பயன்படுத்தக்கூடிய இணைக்கும் வசதி கொண்ட மின்கலனால் இயங்கும் உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கினார். மேலும், மாற்றுத்திறனாளிகளுக்காகச் சிறந்த முறையில் சேவை புரிந்த ஆசிரியர்கள், சமூகப் பணியாளர்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு விருதுகளை வழங்கி சிறப்பித்ததோடு, விளையாட்டு, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்குக் கோப்பை, பரிசுகளை வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பேணிக் காத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காகத் தனித் துறையை உருவாக்கினார். மேலும், அவர்கள் உரிய மரியாதையுடன் அழைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு "மாற்றுத்திறனாளிகள்" என்ற சொல்லையும் அறிமுகப்படுத்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு, கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திரப் பராமரிப்பு உதவித் தொகையை இரண்டு ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கியது, பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை இருமடங்காக உயர்த்தியது, மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன உதவி உபகரணங்கள் வழங்குவது, அரசு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணச் சலுகை, பிற மாவட்டங்களுக்கு அரசுப் போக்குவரத்துக்

கழகப் பேருந்துகளில் தனியாகவோ அல்லது துணையாளர் ஒருவருடனோ பயணம் செய்ய 75% பயணக் கட்டணச் சலுகை வழங்குவது என, மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் சுயமரியாதையுடனும், சம உரிமையுடனும் வாழ பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

உலக மாற்றுத்திறனாளிகள் தினம் 2025-யை முன்னிட்டு வள்ளுவர் கோட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறைச் சார்பில் நடைபெற்ற விழாவில் :

மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

400 மாற்றுத்திறனாளிகளுக்கு 4.12 கோடி ரூபாய் மதிப்பிலான இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள்,

மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலிகள், சக்கர நாற்காலியாகவும் மூன்று சக்கரம் வாகனமாகவும் பயன்படுத்தக்கூடிய இணைக்கும் வசதி கொண்ட மின்கலனால் இயங்கும் உபகரணங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிடுதல்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் வளர்ச்சியையும் மற்றும் தமிழ்நாடு உரிமைகள் திட்டம், புறஉலக சிந்தனையற்றோருக்கான தகைசார் மையம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம் மாற்றுத்திறனாளிகள் நல்வாழ்விற்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

மாற்றுத்திறனாளிகளுக்காகச் சேவை புரிந்தவர்களுக்கு விருதுகள் வழங்குதல்

கை, கால் பாதிக்கப்பட்ட / செவித்திறன் குறையுடைய / இரத்த ஒழுகு குறைபாடு உள்ள பணியாளர் / சுய தொழில் புரிபவர், பார்வை, செவித்திறன், அறிவுசார் குறையுடையோருக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள், ஆரம்பநிலைப் பயிற்சி மையங்களில் பயிலும் செவித்திறன், அறிவுசார் குறையுடையோருக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள், சிறந்த சமூகப் பணியாளர், மாற்றுத்திறனாளிகளுக்குச் சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம், மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனம், மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பாகப் பணியாற்றிய ஓட்டுநர், நடத்துனர் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

விளையாட்டு, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்குக் கோப்பை, பரிசுகள் வழங்குதல்

மாநில அளவில் மாற்றுத்திறனாளிகளுக்காக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெற்ற தென்சென்னை மாவட்டத்திற்குக் கோப்பையையும், மாற்றுத்திறனாளிகளுக்காக நடத்தப்பட்ட ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற 12 நபர்களுக்குச் சான்றிதழ்கள், காசோலைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

உள்ளாட்சி அமைப்புகளில் நியமிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் அறிமுக விழா

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் நேரடியாகத் தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் உறுப்பினராக வகைசெய்யும் அரசினர் (திருத்தச்) சட்ட

முன்வடிவுகளைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 16.04.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்தார்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, சுமார் 650 மாற்றுத்திறனாளிகள் நகர்ப்புற உள்ளாட்சிகளிலும், 12,913 மாற்றுத்திறனாளிகள் கிராமப் பஞ்சாயத்துக்களிலும், 388 மாற்றுத்திறனாளிகள் ஊராட்சி ஒன்றியங்களிலும், மாவட்ட ஊராட்சிகளில் 37 மாற்றுத்திறனாளிகளும் நியமனம் செய்யப்படுவார்கள்.

இந்தச் சட்டமுன்வடிவுகளின் மூலம் மாற்றுத்திறனாளிகளுடைய குரல் உள்ளாட்சி அமைப்புகளில் ஒலிப்பது மட்டுமல்லாமல், அவர்கள் உள்ளாட்சி நிர்வாகத்தை வழிநடத்துகிற வல்லமை பெற்றவர்களாகவும் திகழ்வார்கள்.

அதன் தொடக்கமாக, உள்ளாட்சி அமைப்புகளில் நியமிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் அறிமுக விழாவில் உள்ளாட்சி அமைப்புகளில் தேர்வு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகள் உரையாற்றினர்.

முன்னதாக, மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு மேம்பட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்தும், நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் காணொலிக் காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

படமும் / செய்தியும்

இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்களின் நூற்றாண்டு நினைவு மலர்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 20.12.2025 அன்று நாகப்பட்டினம் மாவட்டம் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நடைபெற்ற இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்களின் நூற்றாண்டு விழாவில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 'தமிழரசு சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா நூற்றாண்டு நினைவு மலரினை" வெளியிட்டார். இந்நிகழ்வில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வை.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஜெ.முகம்மது ஷா நவாஸ், திரு. வி.பி.நாகை மாலி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ப.ஆகாஷ், இ.ஆ.ப., தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. என்.கௌதமன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி வ.பவணந்தி, அரசு அலுவலர்கள், இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

கண்ணுறங்காமல் காவல் காக்கும் படைவீரர்களின் பணி ஈடு இணையற்றது...

கொடி நாளையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சமூக வலைதளப்பதிவு - 07.12.2025

தாயகம் காக்கத் தன்னலம் மறந்து பணியாற்றும் முப்படை வீரர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆயுதப்படை கொடிநாளில் நாட்டு மக்களின் சார்பில் எனது வணக்கங்கள்!

மக்கள் அச்சமின்றிப் பாதுகாப்பாக வாழ, உயிரைத் துச்சமாக எண்ணி, கடுமையான சூழல்களில் கண்ணுறங்காமல் காவல் காக்கும் படைவீரர்களின் பணி ஈடு இணையற்றது.

தியாகத் தீரர்களின் மறுவாழ்வுக்கும், அவர்களின் குடும்ப நலனுக்காகவும் கொடிநாள் நிதியளிப்பது குடிமக்களான நம் அனைவரின் கடமை!

ரூ.32.62 கோடி செலவில் சென்னை, விக்டோரியா பொது அரங்கம் புனரமைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 23.12.2025 அன்று பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில், சென்னையின் கலாச்சாரச் சின்னமான விக்டோரியா பொது அரங்கத்தினை ரூ.32.62 கோடி செலவில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டதை திறந்து வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.1,400.57 கோடி மதிப்பில் 2,66,194 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.12.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், மலப்பாம்பாடி, கலைஞர் திடலில் நடைபெற்ற அரசு விழாவில், 631 கோடியே 48 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவிலான 314 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, 63 கோடியே 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 46 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் 2,66,194 பயனாளிகளுக்கு 1400 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப்பணிகளின் விவரங்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், திருவண்ணாமலை மாநகரில் 12 கோடியே 17 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் மாவட்டப் பெருந்திட்ட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள மக்கள் குறைதீர்வு மையம், இதர அலுவலகக் கட்டடம்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், திருவண்ணாமலை மாநகரில் 30 கோடியே 15 இலட்சம் ரூபாய்

செலவில் புதிய பேருந்து நிலையம், 32 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் புதிய காய்கறி, பூ, பழச்சந்தை வளாகம், திருவண்ணாமலை மாநகரில் 55 கோடியே 49 இலட்சம் மதிப்பில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப்பணிகள், அண்ணாநகர் சுகாதார நிலையத்தில் 60 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் கட்டடம், 30 இலட்சம் ரூபாய் செலவில் துணை சுகாதார நிலையம்;

திருவத்திபுரம் நகராட்சி – செய்யாறு அரசு தலைமை மருத்துவமனையில் 5 கோடி ரூபாய் செலவில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள கூடுதல் மருத்துவக் கட்டடம், திருவத்திபுரம் நகராட்சி அலுவலகம் முன்பு 1 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் புதிய வணிக வளாகக் கட்டடம், போளூர் பேரூராட்சியில் 4 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வணிக வளாகக் கட்டடம், ஆரணி நகராட்சிப் பகுதி 7இல் 30 இலட்சம் ரூபாய் செலவில் நகர்ப்புறத் துணைச் சுகாதார நிலையக் கட்டடம், சேத்துப்பட்டு சிறப்புநிலைப் பேரூராட்சி அலுவலகத்திற்கு 1 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம், களம்பூர் பேரூராட்சியில் 98 இலட்சம் ரூபாய் செலவில் புதிய சமுதாயக் கூடம்;

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில், திருவண்ணாமலை மாநகரில் 2 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கோயில் காவல் நிலையம்;

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில், போளூர் ஊராட்சி ஒன்றியம், கஸ்தம்பாடியில் 22 கோடியே 62 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் இலங்கைத் தமிழர்களுக்கான 280 புதிய வீடுகள், குடியிருப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாலைகள், குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள், கழிவுநீர் கால்வாய் போன்ற அடிப்படை வசதிகள்;

உயர்கல்வித் துறை சார்பில், திருவண்ணாமலை மாநகரில் 7 கோடி ரூபாய் செலவில் கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரியில் 12 வகுப்பறைக் கட்டடங்கள், 4 ஆய்வுக் கூடங்கள்;

வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில், திருவண்ணாமலை மாநகரில் 1 கோடியே 87 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் இணை சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்;

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில், திருவண்ணாமலை மாநகரில் 2 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் ஊரமைப்புத் திட்ட அலுவலகக் கட்டடம்;

பள்ளிக்கல்வித் துறை சார்பில், திருவண்ணாமலை மாநகரில் 56 கோடியே 47 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள அரசு மாதிரி பள்ளிக் கட்டடம், ஆண்கள், பெண்கள் விடுதிகள்;

போளூர், வடமாதிமங்கலம், வடிஇலுப்பை, தச்சூர், நாரையூர், மாமண்டூர், இளங்காடு, வெளுங்கனந்தல் ஆகிய அரசு மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகள், அரசுவெளி அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் 22 கோடியே 73 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், கழிவறைகள், கண்ணமங்கலம், மடம், ஆணைபோகி ஆகிய இடங்களில் 66 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கிளை நூலகக் கட்டடம், புதிய ஊர்ப்புற நூலகக் கட்டடங்கள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், செங்கம் அரசு மருத்துவமனையில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் விபத்து, தீவிர சிகிச்சை மையக் கட்டடம், தண்டராம்பட்டு, வெம்பாக்கம் அரசு மருத்துவமனைகளில் 10 கோடி ரூபாய் செலவில் சமூக நல மகப்பேறு, சிசு அவசர சிகிச்சை மையங்கள், களம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 15 இலட்சம் ரூபாய் செலவில் சித்தா பிரிவுக் கட்டடம்;

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை சார்பில், ஜமுனாமாத்தூரில் 6 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவில் தடுப்பணை;

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், திருவண்ணாமலை-அரூர் சாலை, ஆற்காடு-திண்டிவனம் சாலை, காஞ்சிபுரம்-திருவத்திபுரம் சாலை ஆகிய இடங்களில் 161 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் இருவழித்தடத்திலிருந்து அகலப்படுத்தப்பட்ட நான்கு வழித்தட சாலைகள், மையத் தடுப்புச் சுவர்கள், சிறுபாலங்கள், மேம்படுத்தப்பட்ட சாலை சந்திப்புகள், பேருந்து நிறுத்துமிடங்கள், பேவர் பிளாக் உள்ளிட்ட பல்வேறு பணிகள், வந்தவாசி வட்டம், மருதாடு-வேப்பங்கரணை சாலை, கலசப்பாக்கம் வட்டம், என்.சீ.வீரரூர் சாலை ஆகிய இடங்களில் 14 கோடியே 68 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்மட்டப் பாலங்கள்;

நீர்வளத் துறை சார்பில், காமக்கூர் ஊராட்சி – கமண்டல நாகநதி, படிஅக்ரஹாரம் ஊராட்சி-செய்யாறு, செங்கம் நகரம்-செய்யாறு, மேல்கொடுங்கலூர் ஊராட்சி-சுகநதி, ரெட்டியார்பாளையம்-பாம்பானாறு, தொழுப்பேடு-செய்யாறு, அம்மாபாளையம் ஊராட்சி-நாகநதி ஆகிய இடங்களில் 35 கோடியே ஒரு இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவில் தடுப்பணைகள், தண்டராம்பட்டு வட்டம்-ரெட்டியார்பாளையம் ஊராட்சி, சாத்தனூர் அணையில் 15 கோடியே 5 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் பணியாளர்கள் குடியிருப்பு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், அத்தியந்தல் ஊராட்சியில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம்;

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், பறையம்பட்டு, புதூர் செங்கம், மேல்பட்டீர், மேல்புஞ்சை, கொட்டகுளம், சென்னசமுத்திரம், பரமனந்தல், உச்சிமலைகுப்பம், பழையகுயிலம், கே.கே.நகர், செட்டிதாங்கல், மேல்ராவந்தவாடி, செங்கம், தென்மகாதேவ மங்கலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் 1 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் வைப்பறையுடன் கூடிய சமையலறைக் கட்டடங்கள்;

தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம்/ மகளிர் திட்டம் சார்பில், திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் 10 இலட்சம் ரூபாய் செலவில் மதி சுற்றுலா தல அங்காடிக் கட்டடம்;

ஊரக வளர்ச்சி மறறும் ஊராட்சித் துறை சார்பில், திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 127 கோடியே 20 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடங்கள், பொது

விநியோகக் கடைகள், வேளாண் பொருட்கள் சேமிப்புக் கட்டடங்கள், நியாய விலைக் கடை கட்டடங்கள், நவீன எரிவாயு மின் தகன மேடைகள், தார்ச் சலைகள், பயணியர் நிழற்குடைகள், உயர்மட்டப் பாலங்கள், மேம்படுத்தப்பட்ட சாலைகள், கிராமச் செயலாக்கக் கட்டடங்கள் என 243 முடிவுற்ற பணிகள்;

என மொத்தம், 631 கோடியே 48 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவிலான 314 முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.12.2025 அன்று திறந்து வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், 9 கோடியே 51 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் செங்கம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடப் பணிகள்;

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை சார்பில், சீரான்பாளையத்தில் 15 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வனவர் குடியிருப்பு;

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், வெம்பாக்கத்தில் 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கூரையுடன் கூடிய புதிய நெல் சேமிப்புக் கிடங்கு;

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில், 14 கோடியே 85 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சமுத்திரம், கனந்தம்பூண்டி, செங்கட்டான்குண்டி ஆகிய இடங்களில் உள்ள இலங்கைவாழ் தமிழர்களுக்கான குடியிருப்புப் பகுதிகளில் புதிய சாலைகள், குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள், கழிவுநீர்க் கால்வாய் போன்ற பல்வேறு பணிகள், வேலப்பாடி, ஓசூர், எலத்தூர் ஆகிய இடங்களில் உள்ள இலங்கைவாழ் தமிழர்களுக்கு நிரந்தர புதிய வீடுகள்;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், நாவல்பாக்கம், ஆக்கூர், வழுர், தச்சூர், எஸ்.வி.நகரம், கொம்பனந்தல், செங்கம் மேல் பள்ளிப்பட்டு,

சே.கூடலூர், கீழ்பென்னாத்தூர் ஆகிய இடங்களில் 1 கோடியே 20 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஓரிடச் சேவை மையக் கட்டிடங்கள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறுப் பகுதிகளில் 33 கோடியே 37 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மெய்யூர் ஊராட்சியில் நவீனப் பன்னோக்கு அரங்கம், காரப்பட்டு-மட்டவெட்டு, ஜப்திகாரியந்தல் - அல்லியந்தல், கானமலை - கமண்ட நதி, தஞ்சம்பாறை - இருளம்பாறை ஆகிய இடங்களில் உயர்மட்டப் பாலங்கள், மேல்ராவந்தவாடி, மன்மலை, மேல்பாலூர், காட்டுமலையனூர், புதுப்பாளையம், கல்பட்டு, தாமரைப்பாக்கம், காஞ்சி, மலைமஞ்சனூர், இனம்காரியந்தல், நாயுடுமங்கலம், அண்டம்பள்ளம், 12 புதூர், அரியப்பாடி, பூசிமலைக்குப்பம், ஓதலவாடி, கழனிப்பாக்கம், குன்னகம்பூண்டி, கூத்தம்பட்டு, வெளியாம்பாக்கம், நாட்டேரி, 5 புதூர் ஆகிய இடங்களில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்;

என மொத்தம், 63 கோடியே 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 46 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், 36,640 பயனாளிகளுக்குச் சிறப்பு வீட்டுமனைப் பட்டா, வீட்டுமனைப் பட்டா, உட்பிரிவு மாற்றம், முழுபுலம் பட்டா மாற்றம், 3,485 பயனாளிகளுக்குப் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ்கள், குறு, சிறு விவசாயி சான்று, முதல் பட்டதாரி சான்று, ஆதரவற்ற விதவை சான்று, விபத்து நிவாரண நிதி, முதலமைச்சரின் பொது நிவாரணத் தொகை, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்ட முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளி உதவித் தொகை, விதவை உதவித் தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை, தேசிய இந்திரா காந்தி முதியோர் மற்றும் விதவை உதவித் தொகை, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ்த் திருமணம், இயற்கை மரணம், கல்வி, தற்காலிக இயலாமை ஆகியவற்றிற்கான உதவித் தொகை எனப் பல்வேறு உதவிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 4,467 பயனாளிகளுக்குக் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ்த் தனி நபர் வீடுகள், முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டம், பிரதமரின் ஊரகக் குடியிருப்புகள் திட்டத்தின்கீழ் வீடுகள், பழங்குடியினர்களுக்கான தனி நபர் வீடுகள், தூய்மை பாரத இயக்கத்தின்கீழ்த் தனி நபர் கழிவறைகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அடையாள அட்டைகள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ், 600 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நுண்நிதி கடனுதவி;

தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் – மகளிர் திட்டத்தின் சார்பில், 1,27,582 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு, தாயுமானவர் திட்டத்தின்கீழ்க் கண்டறியப்பட்ட மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்கள், நலிவுற்றோர்களுக்கான நலிவு நிலை குறைப்பு நிதி, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குச் சமுதாய முதலீட்டு நிதி, அடையாள அட்டைகள்;

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில், 729 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், செயற்கைக் கால், முதுகுத்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், விபத்து நிவாரணம், கல்வி உதவித் தொகை, வங்கிக் கடன் மானியம், காதொலிக் கருவி, சக்கர நாற்காலி, மாதாந்திரப் பராமரிப்பு உதவித் தொகை, பேட்டரி சக்கர நாற்காலி, மூன்று சக்கர சைக்கிள், இயற்கை மரணம், ஈமச்சடங்கு உதவித் தொகை, திறன்பேசி போன்ற பல்வேறு உதவிகள்;

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், 1,539 பயனாளிகளுக்குப் புதிய மின்னணுக் குடும்ப அட்டைகள், 23,729 பயனாளிகளுக்குப் பயிர்க் கடன், கால்நடை வளர்ப்பு மூலதனக் கடன், மத்திய காலக் கடன், வீட்டுவசதிக்கடன், மகளிர் சுயஉதவிக் குழு கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், சிறுவணிகக்கடன், குறு, சிறு தொழில் முனைவோர் கடன், தானிய ஈட்டுக் கடன், டாட்செட்கோ கடன், டாம்கோ கடன், ஆதரவற்ற விதவைகள் கடன், நாட்டுப்புறக் கலைஞர் கடன், கல்விக் கடன், கலைஞர் கனவு இல்லம், விவசாய மதிப்புக் கூட்டுப் பொருட்களுக்கான கடன்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில், 13,069 பயனாளிகளுக்குத் பழங்குடியினருக்கான இலவசக் கறவை மாடுகள், நல வாரிய அடையாள அட்டைகள், இலவசத் தையல் இயந்திரங்கள், இலவச சலவைப் பெட்டி, முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவிகள், நன்னிலம் மகளிர் நில உடமைத் திட்டம், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய அடையாள அட்டை, கல்வி, திருமணம்,

இயற்கை மரணம் ஆகியவற்றிற்கான உதவித் தொகை;

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில், 14,453 பயனாளிகளுக்கு விலையில்லா சலவைப் பெட்டி, திரவ பெட்ரோலிய சலவைப் பெட்டி, தையல் இயந்திரம், டாம்கோ கடனுதவி, பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டிகள்;

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், 170 பயனாளிகளுக்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம், கலைஞரின் கைவினைத் திட்டம், புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகியவற்றின்கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவிகள்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், 849 பயனாளிகளுக்கு உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் மூலம் பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள், கட்டிட அனுமதி, புதிய குடிநீர் இணைப்பு, தொழில் வரி பெயர் மாற்றம், சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டைகள்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், 5010 பயனாளிகளுக்கு விவசாயிகளுக்கு விதைகள், விவசாய இடு பொருட்கள், ஒருங்கிணைந்த பண்ணையம், பயறு செயல்விளக்கம், பயறு விதை விநியோகம், புதர் நீக்கம், நெல் இயந்திர நடவு, மக்காச்சோளம் செயல்விளக்கம், நெல் விதை விநியோகம், மணிலா செயல்விளக்கம் போன்ற உதவிகள்;

தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில், 2,400 பயனாளிகளுக்கு நுண்நீர்ப் பாசனத் திட்டம், விவசாயிகளுக்கு வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கான தளைகள் விநியோகம், தனிநபர் நீர் சேகரிப்பு அமைப்பு, தேசிய தோட்டக்கலை இயக்கம், மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம், தேசியத் தோட்டக்கலை இயக்கம், இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம், கல்பந்தல் இயக்கம் ஆகியவற்றின்கீழ் உதவிகள்;

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில், 123 பயனாளிகளுக்கு முதல்வரின் உழவர் நல சேவை மைய திட்டத்தின்கீழ் வேளாண் இடுபொருள் அங்காடி அமைக்க மானியத்துடன் கூடிய கடனுதவி, 100 மதிப்புக் கூட்டு மையங்கள், முதன்மைப் பதப்படுத்தும் நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்கு மானியத்துடன் கூடிய கடனுதவிகள், உழவர் சந்தை அடையாள அட்டைகள்;

வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில், 459 பயனாளிகளுக்கு விவசாயிகளுக்கு 100 சதவிகிதம் மானியத்தில் ஆழ்துளைக் கிணறு, மானியத்தில் வேளாண் இயந்திரங்கள், கருவிகள், பண்ணைக்குட்டை அமைத்தல், சூரிய சக்தியால் இயங்கும் மின்மோட்டார்கள், பயிர்சாகுபடியில் விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்குதல், திறந்தவெளி கிணறு, புனரமைத்தல், மின்மோட்டார், சூரிய கூடார உலர்த்தி, அறுவடைப் பின்சார் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு உதவிகள்;

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை சார்பில், 46 பயனாளிகளுக்கு

மல்பரி நடவு மானியம், புழு வளர்ப்பு மனை மானியம், நெசவாளர் முத்ரா கடன்;

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில், 10,371 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின்கீழ் ஜவ்வாது மலை மற்றும் கலசப்பாக்கம் ஒன்றியங்களில் ஊரக ஏழை கால்நடை விவசாயிகளின் சினையுற்ற கறவைப்பசுக்களுக்கு 50 சதவீதம் மானியத்துடன் ஊட்டச்சத்து, மின்சாரத்தால் இயங்கும் புல் நறுக்கும் கருவி, நாட்டுக்கோழிப் பண்ணை 250 கோழிகள்/அலகு ஆகியவை 50 சதவீதம் மானியத்துடன் வழங்குதல், மீன்பிடி வலைகள் வாங்க மானியம், அலைகள் திட்டத்தின்கீழ் மீனவ மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு நுண்கடன், சிறிய அளவிலான பால் பண்ணை, கால்நடை காப்பீடு, முதல்வரின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் சங்க செயலாளர்களுக்குப் பயிற்சி;

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், 705 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டம், அன்னை தெரசா ஆதரவற்ற பெண் திருமண நிதி உதவித் திட்டம் ஆகியவற்றின் கீழ் உதவிகள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 8,877 பயனாளிகளுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், தாய் சேய் நலப் பெட்டகம் வழங்கும் திட்டம், கலைஞர் கண்ணொளி காப்போம் திட்டம், முதலமைச்சரின் மருத்துவக் காப்பீடு அட்டைகள்;

பள்ளிக் கல்வித் துறை சார்பில், பெற்றோரை இழந்த 306 குழந்தைகளுக்கு வைப்பு நிதி, மாற்றுத்திறன் கொண்ட பள்ளி குழந்தைகளுக்கு உதவி உபகரணங்கள், நிதித் துறை-வங்கிகள் சார்பில், 31 பயனாளிகளுக்குக் கல்விக் கடன் உதவிகள்;

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், 8,384 பயனாளிகளுக்கு விபத்து நிவாரண நிதி, கட்டுமானம், அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம், வாரிய பதிவு அட்டை, கல்வி உதவித் தொகை, இயற்கை மரண நிவாரண நிதி, தமிழ்நாடு ஆட்டோ ஓட்டுநர் தொழிலாளர் நல வாரியம் கல்வி உதவித் தொகை, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை திட்டம், வெற்றி நிச்சயம் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குக் குறுகிய காலத் திறன் பயிற்சி;

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை சார்பில், 220 பயனாளிகளுக்குப் பழங்குடியினர் சூழல் மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களுக்குச் சிறுகடன், பண்ணைக்குட்டை அமைத்தல், விவசாய நிலங்களில் கல்வரப்பு அமைத்தல், மலைவாழ் மக்கள் நிலங்களில் மண்வளப் பாதுகாப்பிற்குத் தடுப்பணை தூர்வாறுதல், பழங்குடியினர்களின் பண்ணைக்குட்டை, கிணறு தூர்வாருதல் போன்ற பல்வேறு உதவிகள்;

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில், 31 பயனாளிகளுக்கு மதுவிலக்குக் குற்றவாளிகளில் மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி உதவித் தொகை;

எரிசக்தித் துறை சார்பில், 1,475 பயனாளிகளுக்குச் சூரிய சக்தி மின் அமைப்பு அமைக்க மானியம், விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்புகள்;

பொதுத் துறை – முன்னாள் இராணுவத்தினர் நலன் சார்பில், 405 பயனாளிகளுக்கு முன்னாள் இராணுவத்தினர்களுக்கான திருமணம், கல்வி, இயற்கை மரணம், கண் கண்ணாடி, மாதாந்திர நிதி ஆகியவற்றிற்கான உதவித் தொகைகள்;

எனப் பல்வேறு துறைகளின் சார்பில், மொத்தம் 1,400 கோடியே 57 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 2,66,194 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

ரூ.39.20 கோடி மதிப்பீட்டில்
தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டுமானப் பணி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.12.2025 அன்று பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற விழாவில், ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்கள் பயன்பெறும் வகையில் சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 39 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள "தமிழ்நாடு ஹஜ் இல்லம்" கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு ஹஜ் இல்லம்

ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்காக – சென்னை விமான நிலையம் அருகில், தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.03.2025 அன்று நடைபெற்ற நாகப்பட்டினம் மாவட்ட அரசு விழாவில் அறிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அடிக்கல் நாட்டினார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்கள் விமானம் புறப்படுவதற்கு ஒருநாள் முன்னர் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு அலுவலகத்தை அணுகிப் பயண நடைமுறைகளை நிறைவேற்றி விமான நிலையத்திற்குப் புறப்படுவதற்கு ஏதுவாகச் சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 39 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டுமானப் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இப்புதிய தமிழ்நாடு ஹஜ் இல்லம் அடித்தளம் உட்பட நான்கு தளங்களுடன் கட்டப்படவுள்ளது. இக்கட்டடத்தின் அடித்தளத்தில் வாகன நிறுத்துமிடம், தரைத் தளத்தில் ஹஜ் அலுவலகம், வரவேற்பறை, கூட்ட அறை, ஹஜ் பயணிகளின் உடைமைகளைப் பாதுகாக்கும் அறை, முதல் தளத்திலிருந்து நான்காவது தளம் வரை சுமார் 400 ஹஜ் பயணிகள் தங்கும் வகையில் மொத்தம் 100 படுக்கை அறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்படவுள்ளன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில்
ரூ.1,045 கோடி மதிப்பில் 2,16,056 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் - 26.12.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.12.2025 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 139 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம், 202 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவிலான 2,559 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, 386 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 62 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் 2,16,056 பயனாளிகளுக்கு 1045 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப்பணிகளின் விவரங்கள்

கள்ளக்குறிச்சி மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், கள்ளக்குறிச்சி மாவட்டம் – வீரசோழபுரத்தில் 39.81 ஏக்கர் பரப்பளவில், 139 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் மொத்தம் 2,85,111 சதுர அடி பரப்பளவில் தரை, எட்டுத் தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் தரைத் தளத்தில் மாவட்டக் கருவூல அலுவலகம், மக்கள் தொடர்பு அலுவலகம், மாற்றுத்திறனாளி அலுவலகம், வங்கி, தபால் அலுவலகம்,தானியங்கிபணம்செலுத்தும்இயந்திரம் (ATM), கூட்ட அரங்கம், மருந்தகம், பதிவேட்டு அறை, முதல் தளத்தில் வேளாண்மைத்துறை, வேளாண் சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, பொருளாதாரம் மற்றும் புள்ளியல் துறை அலுவலகங்கள், கூட்ட அரங்கம், இரண்டாம் தளத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மீன்வளத்துறை அலுவலகங்கள், கூட்ட அரங்கம்:

மூன்றாம் தளத்தில் மாவட்ட ஆட்சியர் அறை, மாவட்ட வருவாய் அலுவலகம், வருவாய்ப் பிரிவு, கலந்தாய்வு அரங்கம், ஒளித்தோற்ற அரங்கம், நான்காம் தளத்தில் பதிவுத்துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, கூட்டுறவுத்துறை, நில அளவை மற்றும் நில பதிவேட்டுத்துறை அலுவலகங்கள் மற்றும் வங்கி;

ஐந்தாம் தளத்தில் இணை மேலாளர் சுகாதாரத் துறை, முதன்மைக் கல்வி அலுவலகம், முதன்மைத் திட்ட அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலகம் (மேல்நிலை), மாவட்டக் கல்வி அலுவலகம் (நடுநிலை) உணவுப் பாதுகாப்புத் துறை அலுவலகங்கள், கூட்ட அரங்கம், ஆறாம் தளத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தொழிலாளர் உதவி ஆணையர். தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம். மாவட்ட வழங்கல் அலுவலகம், நீர்வளத்துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகம், மாவட்ட மேலாளர் தமிழ்நாடு சந்தைப்படுத்துதல் கழகம் ஆகிய அலுவலகங்கள்;

ஏழாம் தளத்தில் சமூக நலத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைகள், மாவட்ட மேலாளர் – ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், உதவி மேலாளர் – பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஒருங்கிணைந்த கட்டளை, கட்டுப்பாட்டு மையம், நகர் மற்றும் கிராமப்புற திட்டமிடல் இயக்குனரகம் ஆகிய அலுவலகங்கள், எட்டாம் தளத்தில் மின்தூக்கி அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், நான்கு, இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், மழைநீர் சேகரிப்பு, கழிவுநீர் கால்வாய் வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான நடைபாதை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கழிப்பறை வசதிகள், தீயணைப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடுகள், முதல்வரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டத்தின்கீழ் வீடுகள், பிரதமரின் வீடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் வீடுகள், ஊராட்சிமன்ற அலுவலகங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், அங்கன்வாடிக் கட்டடங்கள், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், கணினி ஆய்வகங்கள், ஊராட்சிச் செயலகக் கட்டடங்கள், இலங்கைவாழ் தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாம்களில் புதிய வீடுகள், பிரதமர் வீடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் வீடுகள், பயணிகள் நிழற்குடைகள், நியாயவிலைக் கடைகள் என 100 கோடியே 80 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் 2,525 முடிவுற்ற பணிகள்;

பள்ளிக் கல்வித் துறை சார்பில், நாகலூரில் 56 கோடியே 47 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு மாதிரிப் பள்ளிக் கட்டடம், நாகலூர் அரசு மாதிரிப்பள்ளி மாணவர், மாணவியர் விடுதிக் கட்டடங்கள்;

உளுந்தூர்ப்பேட்டை அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, திருக்கோவிலூர் அரசுப்

பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கள்ளக்குறிச்சி, தியாகதுருகம் ஆகிய இடங்களில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகள், மணலூர்ப்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ரிஷிவந்தியம், நாகலூர், புதுப்பட்டு, மூங்கில்துறைப்பட்டு, அரியலூர், கச்சிராயப்பாளையம், சேந்தநாடு, திருப்பாலப்பந்தல், பழையனூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள், ஏமப்பேர் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் 25 கோடியே 11 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 6 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் திறந்தவெளி கிணறுகள், நீர் உந்துக் குழாய், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் சேகரிப்புத் தொட்டி, மின் மோட்டார்கள், நீர் உந்துக் குழாய்கள், மின் மோட்டார் அறைகள், கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், மணலூர்ப்பேட்டை, வடக்கனந்தல் ஆகிய நகராட்சிகள், பேரூராட்சிகள், கல்வராயன்மலை, சின்னசேலம், சங்கராபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் எனப் பல்வேறு இடங்களில் 7 கோடியே 19 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் ஆரம்ப சுகாதார மையங்கள், துணை சுகாதார நிலையங்கள், வட்டாரப் பொதுச் சுகாதார ஆய்வகக் கட்டடம்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், கள்ளக்குறிச்சியில் 1 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் 2 மெட்ரிக் டன்/மணிநேர திறன் கொண்ட விதை பதப்படுத்தும் இயந்திரக் கொட்டகையுடன் கூடிய 250 மெட்ரிக் டன் விதை சேமிப்புக் கிடங்கு, கள்ளக்குறிச்சியில் 3 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், சங்கராபுரம் பேரூராட்சியில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் புதிய பேரூராட்சி அலுவலகக் கட்டடம்;

என மொத்தம், 341 கோடியே 77 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் செலவிலான 2,559 முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், கள்ளக்குறிச்சி நகராட்சிப் பகுதியில் 167 கோடியே 16 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாளச்சாக்கடை திட்டம் செயல்படுத்துதல், கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், பாதாளச்சாக்கடை கழிவுநீர் சேகரிப்புக் குழாய்கள், இயந்திரக் குழிகள் பராமரித்தல், கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தை இயக்குதல், பராமரித்தல் போன்ற பல்வேறு பணிகள்,

உளுந்தூர்ப்பேட்டை நகராட்சியில் 16 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம், 30 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள்;

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், கல்வராயன்மலை வட்டம், வெள்ளிமலை முதல் சின்னத்திருப்பதி வரை 98 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள்;

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், காட்டுவனஞ்சூர் சிட்கோ தொழிற்பேட்டை வளாகத்தில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவாளர்கள் பிரித்திவி இன்னர்வேர்ஸ் பி.லிட்., ஆயத்த ஆடைகள் தயாரிப்பு நிறுவனத்திற்கான கட்டடம்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில், வீரசோழபுரம் ஊராட்சியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இணை இயக்குநர்/திட்ட இயக்குநருக்கான புதிய குடியிருப்பு வளாகம், முகாம் அலுவலகக் கட்டடம், வாணாபுரம் ஊராட்சி பகண்டையில் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம், நைனார்பாளையம், பொரசப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மலக்கசடு மேலாண்மைச் சுத்திகரிப்பு நிலையங்கள், பூண்டி, நல்லாத்தூர், அரியபெருமானூர், சோமண்டார்குடி, பாக்கம், அரியலூர், சொரையப்பட்டு, கரடி, சாங்கியம், சிறுளாப்பட்டு, பாண்டூர், எ.சாத்தனூர், பாலி ஆகிய ஊராட்சிகளில் 2 கோடியே 56 இலட்சத்து

23 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், பொற்படாக்குறிச்சி, சிறுமங்கலம், பெரியகொள்ளியூர், அரியந்தக்கா, மேல்விழி, பல்லகச்சேரி, நெடுமுடையான், வடமருதூர் ஆகிய இடங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் 3 கோடியே 19 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைக் கட்டடங்கள், கணினி ஆய்வகக் கட்டடங்கள், கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களின் பல்வேறு இடங்களில் 73 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு உணவுத் தானியக் கிடங்குகள், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 33 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அங்கன்வாடிக் கட்டடங்கள், கல்வராயன்மலை ஊராட்சி ஒன்றியத்தில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு சிறுபாலங்கள், 87 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 10 சமையல் கூடங்கள், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 30 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மூன்று உணவு தானியக் கிடங்குகள்;

தாட்கோ சார்பில், அரசம்பட்டு, பிடாகம், கொசப்பாடி, எடுத்தவாய்நத்தம் ஆகிய இடங்களில் 4 கோடியே 23 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கிராம அறிவுசார் மையங்கள்;

பள்ளிக் கல்வித் துறை சார்பில், வாணாபுரம் வட்டம் பகண்டையில் 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கிளை நூலகக் கட்டடம்;

என மொத்தம், 386 கோடியே 48 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 62 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், 20,043 பயனாளிகளுக்கு நகர்ப்புற வீட்டுமனைப் பட்டாக்கள், வீட்டுமனைப்பட்டா, ஆதிதிராவிடர் நலப் பட்டா, உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உட்பிரிவு பட்டா மாறுதல், முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதி, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்ட இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, விபத்து உதவித் தொகை போன்ற பல்வேறு உதவிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 41,620 பயனாளிகளுக்குக் கலைஞர் கனவு இல்லம் திட்டம், முதலமைச்சர் வீடுகள் மறுகட்டுமானத் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் வீடுகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ்த் தனி நபர் கிணறு, தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் கீழ் தனி நபர் இல்லக் கழிப்பறைகள், வீட்டுக் குடிநீர் இணைப்புகள் போன்ற பல்வேறு உதவிகள்;

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில், 3,423 பயனாளிகளுக்கு ஈமச்சடங்கு, இயற்கை மரண உதவித் தொகை, விபத்து நிவாரணம், வங்கிக் கடன் மானியம், காதொலிக் கருவி, தையல் இயந்திரம், திறன் பேசி, கருப்புக் கண்ணாடி, நடைபயிற்சி உபகரணங்கள், ஒளிரும் மடக்கு ஊன்றுகோல், பேட்டரி நாற்காலி, இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், செயற்கை கால் ஆகிய பல்வேறு உதவிகள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 13,101 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டைகள், கலைஞர் கண்ணொளிக் காப்போம் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ்க் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மகப்பேறு பெட்டகம் போன்ற உதவிகள்;

தாட்கோ சார்பில், 3,036 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவுத் திட்டம், துரித மின் இணைப்புத் திட்டம், நன்னிலம் மகளிர் நில உடமைத் திட்டம், கல்வி உதவி, தமிழ்நாடு

தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், 77,198 பயனாளிகளுக்குச் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன், மகளிர் குழுக்களுக்குச் சுழல் நிதி அளித்தல், சமுதாய முதலீட்டு நிதி, அமுத சுரபி நிதி, வட்டார வணிக வள மையம், நலிவு நிலை குறைப்பு நிதி, சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் ஆகியவற்றின் கீழ் உதவிகள்;

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், 26,487 பயனாளிகளுக்குப் பயிர்க்கடன், கறவை மாடு பராமரிப்புக் கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், சுய உதவிக்குழு கடன், தானிய ஈட்டுக்கடன், புதிய மின்னணுக் குடும்ப அட்டைகள் போன்ற உதவிகள்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், 12,369 பயனாளிகளுக்குத் தனி நபர் வன உரிமைச் சான்று, பழங்குடியினர் நலவாரிய அட்டைகள், விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டிகள், பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டிகள்;

தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய அடையாள அட்டைகள், இயற்கை மரண உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி ஆகிய பல்வேறு உதவிகள்;

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், 8,035 பயனாளிகளுக்கு கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் உதவித் தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, திரவ பெட்ரோலிய சலவைப் பெட்டி, மிதிவண்டி ஆகிய பல்வேறு உதவிகள்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், 1,061 பயனாளிகளுக்குப் பயிர் பாதுகாப்பு மருந்துகள், சிறுதானியங்கள், தார்பாய், பயறு விதைகள், புதர் நீக்கம், நெல் இயந்திர நடவு, நெல் விதை, இலைவழித் தெளிப்புப்போன்ற பல்வேறு உதவிகள் வழங்குதல்;

தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில், 1,000 பயனாளிகளுக்குக் குறைந்தவிலை வெங்காயச் சேமிப்புக் கிடங்கு, ஒருங்கிணைந்த பண்ணையம், நிழல்வலைக் கூடாரம், தனிநபர் நீர்ச் சேகரிப்பு அமைப்பு, தேனீ பெட்டி, தேன் பிரித்தெடுக்கும் கருவி, நிரந்தர மண்புழு உரக்கூடம், நகரும் காய்கறித் தள்ளுவண்டி ஆகிய பல்வேறு உதவிகள்;

கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில், 569 பயனாளிகளுக்குக் கோழி வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, மாணியத்தில் புல்நறுக்கும் கருவி, நாட்டுக்கோழி வளர்ப்பு போன்ற பல்வேறு உதவிகள், ஆவின் சார்பில், 4,102 பயனாளிகளுக்குச் சிறிய அளவிலான பால் பண்ணை, தேசியக் கால்நடை இயக்கத் திட்டத்தின்கீழ்க் காப்பீடு, ஒருங்கிணைந்த கால்நடை கருத்தரித்தல் திட்டம், எருமைக்கன்று வளர்ப்புத் திட்டம், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் வெற்றி நிச்சயம் செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சி, அண்ணல் அம்பத்கர் பழங்குடியினர் திட்டத்தின்கீழ்க் கறவை மாடுகள் வாங்கக் கடனுதவிகள் ஆகியவற்றின்கீழ் உதவிகள்;

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், பெற்றோரை இழந்த 459 ஆதரவற்ற குழந்தைகளுக்கு அன்புக் கரங்கள் திட்டத்தின்கீழ் மாதாந்திர பராமரிப்புத் தொகை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவுக் கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண உதவித் திட்டம், அன்னை தெரசா ஆதரவற்ற பெண் திருமண நிதி உதவித் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் உதவிகள்;

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், 1,000 பயனாளிகளுக்குக் கட்டுமானம், அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்குத் திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, நல வாரிய அட்டைகள்;

எரிசக்தித் துறை, தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் சார்பில், 893 பயனாளிகளுக்கு உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு மின் இணைப்புப் பெயர் மாற்றம், புதிய மின் இணைப்பு, விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள்;

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சார்பில், 205 பயனாளிகளுக்கு மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு நுண்நிதிக் கடனுதவிகள்;

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை - மாவட்டத் தொழில் மையம் சார்பில், 277 பயனாளிகளுக்குக் கலைஞரின் கைவினைத் திட்டம், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம், புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவிகள்;

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பில், 12 பயனாளிகளுக்குத் தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின்கீழ் முதன்மை பதப்படுத்தும் நிலையம் அமைக்க மானியத்துடன் கூடிய கடனுதவிகள், உழவர் சந்தை அடையாள அட்டைகள்;

வேளாண் பொறியியல் துறையின் சார்பில், 20 பயனாளிகளுக்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் ஆழ்துளைக் கிணறு, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம், வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கத் திட்டம், முதலமைச்சரின் சூரிய சக்தியால் இயங்கும் மின்மோட்டார் அமைக்கும் திட்டம், பயிர்சாகுபடியில் விதைப்பு முதல் அறுவடை வரையில் இயந்திரமயமாக்குதல், திறந்தவெளி கிணறு புனரமைத்தல் ஆகியவற்றின் கீழ் உதவிகள்;

பள்ளிக் கல்வித் துறையின் சார்பில், 38 பயனாளிகளுக்கு வருவாய் ஈட்டும் பெற்றோர் இழந்த குழந்தைகளுக்கான வைப்பு நிதி;

மாவட்ட வன அலுவலகம் சார்பில், 902 பயனாளிகளுக்குக் காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம், மண் மற்றும் ஈரப்பதப் பாதுகாப்புப் பணி, பசுமைத் தமிழ்நாடு இயக்கம் ஆகிய உதவிகள்;

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் சார்பில், 37 பயனாளிகளுக்கு மதுவிலக்குக் குற்றவாளிகளில் மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி உதவித் தொகை;

மாவட்ட முன்னோடி வங்கி சார்பில், 164 பயனாளிகளுக்குக் கல்லூரி மாணவர்களுக்கான கல்விக் கடன்;

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், 5 பயனாளிகளுக்கு உ.கீரனூர் திட்டப்பகுதி – IIஇல் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீடு ஆணை;

எனப் பல்வேறு துறைகளின் சார்பில், மொத்தம் 1,045 கோடியே 41 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 2,16,056 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

"டித்வா" புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 06.12.2025 அன்று 'டித்வா' புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நெருக்கடியில் சிக்கித் தவித்து இன்னலுறும் இலங்கை வாழ் மக்களுக்குத் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் உதவிடும் வகையில் சென்னை துறைமுகத்திலிருந்து 650 மெட்ரிக் டன்னும், தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 300 மெட்ரிக் டன்னும் என மொத்தம் 950 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்களை இலங்கை நாட்டிற்கு இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் மூலம் கொடியசைத்து அனுப்பி வைத்தார். இந்நிகழ்வில், தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் நிவாரணப் பொருட்களின் மாதிரித் தொகுப்பினை இலங்கை துணைத் தூதர் டாக்டர் கணேசநாதன் கீதீஸ்வரன் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

'டித்வா' புயல் பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கைவாழ் மக்களுக்கு உதவக்கூடிய வகையில், சென்னை துறைமுகத்திலிருந்து 300 மெட்ரிக் டன் சர்க்கரை, 300 மெட்ரிக் டன் பருப்பு, 25 மெட்ரிக் டன் பால்பவுடர், 25 மெட்ரிக் டன் கொண்ட 5,000 வேட்டிகள், 5,000 சேலைகள், 10,000 துண்டுகள், 10,000 போர்வைகள், 1,000 தார்பாலீன்கள் ஆகிய நிவாரணப் பொருட்களையும், தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 150 மெட்ரின் டன் சர்க்கரை, 150 மெட்ரிக் டன் பருப்பு உள்ளடக்கிய நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இப்பணிகள் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், கைத்தறித் துறை, வேளாண்மை-உழவர் நலத்துறை ஆகிய துறைகள் மூலம் ஒருங்கிணைந்து சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டது.

ரூ.34.30 கோடி மதிப்பில் பல அச்சுகள் கொண்ட 20 அதிநவீன குளிர் சாதன சொகுசுப் பேருந்துகள் இயக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார் - 24.12.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.12.2025 அன்று போக்குவரத்துத் துறை சார்பில் சென்னை, தீவுத்திடல் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 34.30 கோடி ரூபாய் மதிப்பிலான பல அச்சுகள் (MULTI-AXLE) கொண்ட 20 அதிநவீனக் குளிர்சாதனச் சொகுசுப் பேருந்துகள் இயக்கத்தைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இப்பேருந்து சேவை தமிழ்நாடு போக்குவரத்துத் துறை மூலமாக முதன்முறையாகத் தமிழ்நாட்டின் பல்வேறு தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அரசு போக்குவரத்துக் கழக பொன்விழாவையொட்டி 1,05,778 ஊழியர்களுக்கு 3.33 கோடி ரூபாய் மதிப்பிலான சுவர் கடிகாரங்கள் வழங்கும் நிகழ்வினை 10 ஊழியர்களுக்கு வழங்கித் தொடங்கி வைத்தார்,

பல அச்சுகள் (MULTI-AXLE) கொண்ட 20 அதிநவீனக் குளிர் சாதனப் புதிய பேருந்தின் சிறப்பம்சங்கள்

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நவீனத் தொழில்நுட்பத்துடன் கூடிய பல அச்சுகள் (MULTI-AXLE) கொண்ட 20 அதிநவீனக் குளிர்சாதன வசதி கொண்ட புதிய பேருந்தில்:

பயணிகளுக்கு உயர்தர மற்றும் வசதியான இருக்கை அமைப்பு - 2×2 சீட்டிங் அமைப்புடன் அதிகபட்சம் 51 வசதியான இருக்கைகள், வெளிப்புறக் காட்சியை ரசிக்க விசாலமான Panoramic ஜன்னல்கள், உயர்தர மேல்நிலைப் பொருட்கள் வைக்குமிடம் (Overhead Luggage Compartment);

UNOMINDA (Harita) VFX09 உயர்தர இருக்கைகள் – Calf Support வசதியுடன் கூடிய இருக்கைகள், இரட்டை USB Mobile Charging Ports, பத்திரிகைகள், பாட்டில் ஹோல்டர், காலணி வைக்கும் இடம்;

வைக்க வசதியான, பாதுகாப்பான ஓட்டுநர் கேபின் – மனித உடல் அமைப்பிற்கு ஏற்ற Ergonomic Control Layout, வளைந்த வடிவ Dashboard, Air-Suspension கொண்ட ஓட்டுநர் இருக்கை, முழங்கால் பாதுகாப்பு அமைப்பு (Knee Impact Protection System):

மேம்பட்ட PX Suspension System– மேம்பட்ட Steering Stability, Air Spring-களில் குறைந்த அழுத்தம், Shock Absorber System. EVSC, ESP, ASR உள்ளிட்ட மேம்பட்ட பிரேக்கிங், பாதுகாப்பு அமைப்புகள், பயணிகள் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தும் தீ பாதுகாப்பு அமைப்பு, அவசரநிலையில் விரைவாகப் பயணிகளை வெளியேற்ற அகலமான Roof Escape Hatch, முன், பின் மற்றும் பக்க மோதல்களில் தாக்கத்தைக் குறைக்கும் FUP / FIP / SUPD பாதுகாப்பு அமைப்புகள், மேம்பட்ட Rollover & Pedestrian பாதுகாப்பு வசதி:

சுற்றுச்சூழல் பாதுகாப்பு அம்சங்கள் – BS-VI Emission Norms-க்கு முழுமையான இணக்கம், EGR + SCR தொழில்நுட்பம் மூலம் NOx & Emission குறைப்பு, குறைந்த கார்பன் உமிழ்வு, அதிக வலிமையான Monocoque / Reinforced Body Structure, நீண்ட ஆயுட்காலத்திற்கான Anti-Corrosion Treatment, அவசரகாலத்தில் பயணிகள் வெளியேறுவதற்கு அவசரகால வெளியேறும் வழி, விபத்துகளைத் தவிர்த்திட வாகனத்தின் முன், பின் பகுதிகளில் கேமராக்கள், வாகனச் செயல்திறன், கோளாறுகளை உடனுக்குடன் கண்டறிய Electronic Diagnostic Control வசதி, ரிவர்ஸ் சென்சார் வசதி, கேமரா, வாகனத்தைக் கண்காணித்திட Bus Tracking System வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இப்பேருந்துகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அரசுப் போக்குவரத்துக் கழக பொன்விழாவையொட்டி ஊழியர்களுக்குச் சுவர் கடிகாரங்கள் வழங்குதல்

பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கும் வகையில் தமிழ்நாடு அரசால் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தொடங்கப்பட்டு 50-ஆம் ஆண்டு (1976–2025) பொன்விழா நடைபெற்று வருவதையொட்டி போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி வரும் 1,05,778 ஊழியர்களுக்கு 3.33 கோடி ரூபாய் மதிப்பிலான சுவர் கடிகாரங்கள் வழங்கிடும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10 போக்குவரத்து ஊழியர்களுக்குச் சுவர் கடிகாரங்களை வழங்கித் தொடங்கி வைத்தார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.56.36 கோடி செலவில் “பொருநை அருங்காட்சியகம்”



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
திறந்து வைத்தார் - 20.12.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் பொருநை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூர்,சிவகளை,கொற்கை,துலுக்கர்பட்டி ஆகிய தொல்லியல் தளங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அண்மைக்காலத்தில் அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அரிய தொல்பொருட்களை உலகத்தமிழர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கண்டு தமிழ்நாட்டின் தொன்மையை அறிந்துகொள்ளும் வகையில் திருநெல்வேலி அருகே 13 ஏக்கர் நிலப்பரப்பில் 54,296 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தினை 20.12.2025 அன்று திறந்து வைத்தார்.

திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் விதி 110-இன் கீழ், 09.09.2021 அன்று, “இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, இனித் தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக நிறுவுவதே தமிழ்நாடு அரசின் தலையாயக் கடமை என்றும்,

சிவகளை, ஆதிச்சநல்லூர், கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கிடைத்த அரிய பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாகத் திருநெல்வேலி நகரில் நவீன வசதிகளுடன் பொருநை அருங்காட்சியகம் உருவாக்கப்படும்" எனவும் அறிவித்தார்.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்திட ஏதுவாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொருநை அருங்காட்சியகத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு 18.05.2023 அன்று காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

பொருநை அருங்காட்சியகம் திறப்பு

தமிழ்நாட்டில் இரும்பின் தொன்மையைப் பறைசாற்றிய சிவகளை, தமிழ்ப்பண்பாட்டின் தொட்டிலாகக் கருதப்படும் ஆதிச்சநல்லூர், சங்ககாலப் பாண்டியரின் துறைமுகமான கொற்கை ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற அரிய தொல்பொருட்களை ஒரே இடத்தில் பொருநை ஆற்றங்கரை நாகரிகம் என்ற கருப்பொருளின் அடிப்படையில் நவீன அறிவியல் தொழில்நுட்பங்களுடன் சிறப்பாகத் தொல்பொருட்களைக் காட்சிப்படுத்தி நவீன வசதிகளோடு அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். பின்னர், பொருநை அருங்காட்சியகத்தின் அறிமுகக் கட்டடம், சிவகளை காட்சி அரங்கில் இரும்பின் தொன்மை காட்சிக்கூடம், முதுமக்கள் தாழி காட்சிக்கூடம், வாழ்விடப் பகுதி காட்சிக்கூடம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

பொருநை அருங்காட்சியக வளாகத்தில் அறிமுகக்கூடம், சிவகளை, ஆதிச்சநல்லூர், கொற்கை ஆகிய கட்டடத் தொகுதிகள் 54,296 சதுரஅடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டடத் தொகுதிகளும் முற்றம், தாழ்வாரம் போன்றவற்றுடன் தரைத்தளம், முதல் தளம் என்ற வகையில் இப்பகுதியின் கட்டடக்கலையைப் பிரதிபலிக்கும் வகையில் கட்டப்பட்டுள்ளன. இக்கட்டடத்தின் முகப்புகளிலும் உட்பகுதிகளிலும் உள்ளூர் கவின்கலைகள் மிளிர்கின்றன.

இவற்றுடன் கண்கவர் நீர்த்தடாகம், நிகழ்த்து கலைகளைக் காணும் திறந்தவெளி அரங்கம், தொல்லியல் மாதிரிகள், உள்ளூர் கைவினைப் பொருட்களின் விற்பனையகம், மின்கலத்தால் இயங்கும் வாகனம், பொதுமக்கள் செல்ல எளிதான நடைபாதை, இயற்கையை ரசிக்க ஆங்காங்கே மரங்கள், குறுஞ்செடிகள், குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள், இளைப்பாற ஆங்காங்கே இருக்கைகளும் அமைக்கப்பட்டுத் தமிழ்நாட்டின் தொன்மையை அறிய அறிவியலோடும், இயற்கையோடும் இணைந்து அனைவரும் கண்டுகளிக்கும் வகையில் சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிவகளை

சிவகளை தொல்லியல் தளத்தில் 2019-ஆம் ஆண்டு முதல் 2022-ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் ஈமத்தாழிகள், உயர் வெண்கலத்தாலான கலன், இரும்பாலான கருவிகள், படையல் கலன்கள், பலவண்ண மட்கலன்கள், குறியீடு பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் எனப் பல்வேறு வகையான தொல்பொருட்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

சிவகளைத் தொல்லியல் அகழாய்வில் ஈமத்தாழி ஒன்றில் சேகரிக்கப்பட்ட உமி நீங்கிய நெல்மணிகளை 2021-ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டின் மியாமி நகரத்தில் அமைந்திருக்கும் உலகப் புகழ்பெற்ற பீட்டா அனலடிக் ஆய்வுக்கூடம் (Beta Analytics Laboratory) வாயிலாக, காலக் கணக்கீடு செய்ததில், இதன் காலம் கி.மு.1155 என்று கண்டறியப்பட்டுள்ளது. இக்காலக்கணக்கீடு வாயிலாகப் பொருநை ஆற்றங்கரையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தினர் 3200 ஆண்டுகளுக்கு முன்னர் நெல் பயிரிட்டுள்ளனர் என்று அறிவியல் பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதிச்சநல்லூர்

ஆதிச்சநல்லூரில் 2019 முதல் 2021 வரை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் ஆதிச்சநல்லூரின் வரலாற்றை மறுகட்டமைக்க உதவுகிறது. ஆதிச்சநல்லூரில் இரும்புக் காலத்திற்கு முன்னும் பின்னும் வாழ்ந்த மக்களின் வரலாற்றை வெளிப்படுத்தியுள்ளது.கற்காலத்தைச் சார்ந்த நுண்கற்காலக் கருவிகள் கிடைத்திருப்பதன் மூலம் இங்கு இரும்புக் காலத்திற்கு முற்பட்ட மக்கள் வாழ்ந்திருப்பதை அறிய முடிகிறது.

மேலும், முதுமக்கள் தாழிகள், இரும்பாலான கருவிகள், படையல் பானைகள், மட்கலன்கள், குறியீடு பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்,தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் போன்ற தொல்பொருட்கள்

இரும்புக் காலத்தைத் தொடர்ந்து தொடக்க வரலாற்றுக் காலத்திலும் மக்கள் இங்கு வாழ்ந்திருப்பதை, உறுதி செய்கின்றன.

ஆதிச்சநல்லூரில் அன்றைய நீர் மேலாண்மையை எடுத்துரைக்கும் வகையில் 21 எண்ணிக்கை கொண்ட சுடுமண்ணாலான உருளைக்குழாய்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆதிச்சநல்லூர், சிவகளையில் கிடைக்கப் பெற்றுள்ள அதிக அளவிலான உயர்தர வெண்கலம், தங்கத்தினாலான பொருட்கள் தமிழ்ச் சமூகத்தின் வளமான பொருளாதாரத்தினையும், சமூக நிலையையும் பிரதிபலிக்கின்றன.

தமிழ்நாட்டில் இரும்பின் தொன்மை

சிவகளையில் இரும்புப் பயன்பாடு கி.மு.3300–க்கும், ஆதிச்சநல்லூரில் கி.மு.2613-க்கும் கொண்டு சென்றதை அறிவியல் அடிப்படையிலான காலக்கணக்கீடுகள் எடுத்துரைக்கின்றன. எனவே, தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 5,300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது அறிவியல் துணைகொண்டு நிறுவப்பட்டுள்ளது.

துலுக்கர்பட்டி

திருநெல்வேலி அருகே உள்ள துலுக்கர்பட்டியில் 2021-ஆம் ஆண்டு முதல் 2023-ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் வெள்ளி முத்திரையிடப்பட்ட நாணயம், தந்தத்தினால் ஆன பொருட்கள், கண்ணாடி (ஆடி) மணிகள், சுடுமண் மணிகள், சூதுபவளம், அகேட், செவ்வந்தி, பளிங்கு ஆகியவற்றால் செய்யப்பட்ட அரிய கல்மணிகள், பல்வேறு வகையான இரும்புப் பொருட்கள், சுடுமண்ணால் ஆன உருவங்கள், சக்கரங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் இங்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றோடு ஏறத்தாழ 5000 - க்கும் மேற்பட்ட குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டது சிறப்பாகக் கருதப்படுகிறது.

கொற்கை

கொற்கை பாண்டியர்களின் தலைநகரமாகவும் துறைமுகமாகவும் செயல்பட்டிருந்ததை மெய்ப்பிக்கும் வகையில் சங்க இலக்கியங்களில் குறிப்புகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. மேலும், வெளிநாட்டார் பயணக்குறிப்புகளும்

கொற்கை துறைமுகத்தைப் பற்றிக் கூறுகின்றன. கொற்கையில் 1968-1969, 2020-2021 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்ணாடி (ஆடி) மணிகள், கண்ணாடி வளையல்கள், சங்கு வளையல்கள், சுடுமண் மணிகள், அரிய கல்மணிகள், வட்டச்சில்லுகள், சுடுமண் உருவங்கள், இரும்புப் பொருட்கள், செம்புப் பொருட்கள், சுடுமண்ணால் செய்யப்பட்டுத் துளையிடப்பட்ட குழாய்கள், சங்க கால செப்புக் காசுகள், ரோம் நாட்டு அரிட்டன் வகை பானை ஓடுகள், சீனநாட்டு செலடன் வகை பானை ஓடுகள், வெள்ளி முத்திரைக் காசுகள், வடக்கத்திய மெருகூட்டப்பட்ட கருப்பு நிற பானை ஓடுகள், கங்கை சமவெளியைச் சார்ந்த கருப்புநிறப் பூச்சுப் பெற்றுள்ள பானை ஓடுகள் எனப் பல்வேறு தொல்பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கொற்கை கி.மு. 8-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே துறைமுகமாகச் செயல்பட்டிருந்தது என்பதை முந்தைய அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற கரிமப் பகுப்பாய்வுகளின் காலக் கணக்கீடு முடிவுகளின் வாயிலாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட பொருநை அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ள சிறப்பு அம்சங்கள் தமிழ்நாட்டின் தொன்மை, வரலாற்றினையும் சிவகளை, ஆதிச்சநல்லூர், துலுக்கர்பட்டி, கொற்கை ஆகிய பகுதிகளின் முக்கியத்துவத்தையும் உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டும் வகையில் 15 நிமிட ஒளி-ஒலிக் காட்சி குளிரூட்டப்பட்ட அரங்கில் காட்சிப்படுத்தப்படுகிறது.

5300 ஆண்டுகளுக்கு முன்னர் உலையில் இட்டு இரும்பு உருக்கும் தொழில்நுட்பம் தமிழ் நிலப்பரப்பில் தோன்றியது என்பது அறிவியல் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. இவற்றினை விளக்கும் வகையில் இரும்பு உருக்குதல் செயல்முறை நேரடிக் காட்சி, மாதிரி வடிவில் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

சிந்துவெளிக்கும், தமிழ்நாட்டிற்கும் இடையேயான தொடர்பை வெளிப்படுத்தும் குறியீடுகள், பண்பாட்டுக்கூறுகள், தமிழ் இலக்கியங்கள் காட்டும் காட்சிகள் ஆகியவை ஒப்பீட்டுடன் விளக்கப்பட்டுள்ளன.

கொற்கைத் துறைமுகத்தில் கடல்வழி வணிகம் சிறப்புற்றிருந்தது. அயல்நாட்டு வணிகர்களுடன் தமிழர்கள் மேற்கொண்ட ஏற்றுமதி-இறக்குமதி வணிகத்தின் சிறப்பைக் கண்முன்னே கொண்டு வரும் வகையில் இரண்டு கலன்களின் மாதிரிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தமிழ் நிலங்களின் தனிச்சிறப்பை உணர்வுப் பூர்வமாக அனுபவிக்கச் செய்யும் ஓர் பயணமாக, ஐந்திணைகள் ஐந்து பரிமாண வடிவில் (5D) பொதுமக்கள் உவகையுடன் கண்டுகளிக்கும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகங்கள் சேகரிப்பிலிருந்து அலெக்ஸாண்டர் ரீ அவர்களால் ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கற்கருவிகள், சங்கினாலான பொருட்கள் தயாரித்தல், இரும்பு உருக்குதல் போன்ற அறிவியல்-தொழில்நுட்ப முறைகளும், நீர் மேலாண்மை, வணிகப் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளும் பொதுமக்கள் உணர்வுப் பூர்வமாக அனுபவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சிவகளை, ஆதிச்சநல்லூர், துலுக்கர்பட்டி, கொற்கை ஆகிய தொல்லியல் தளங்களின் வரைபடங்களும், தொல்பொருட்களும் அவற்றின் முக்கியத்துவத்தையும், பொருநை ஆற்றங்கரை நாகரிகத்தின் தனிச்சிறப்பையும் வெளிப்படுத்துகின்றன.

பொருநை ஆற்றங்கரையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கைமுறை, பண்பாடு, தொழில்நுட்ப முன்னேற்றம், சுற்றுச்சூழல் ஆகியவற்றை இங்குள்ள ஓவியங்கள் உயிர்ப்புடன் கண்முன் காட்டுகின்றன.

தொடுதிரை, மெய்நிகர் காட்சிகள், ஒளி-ஒலி நிகழ்படங்கள், ஆவணப் படங்கள், உயிரூட்டுக் காட்சிகள், மாதிரி வடிவங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகள் மூலம் தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையையும், தொடர்ச்சியினையும் எதிரொளிக்கும் வகையில் பொருநை அருங்காட்சியகம் உலகத் தமிழரை மட்டுமின்றி அனைத்துத் தரப்பினரையும் ஈர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெற்றோரை இழந்துவாடும் நான்கு குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.12.2025 அன்று தலைமைச் செயலகத்தில், கள்ளக்குறிச்சி மாவட்டம், பூட்டை கிராமத்தைச் சேர்ந்த பெற்றோர்களை இழந்த நான்கு குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு வீட்டுமனைப் பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடு ஒதுக்கீடு. பணிநியமன ஆணை, அன்புக்கரங்கள் திட்டத்தின்கீழ் நிதியுதவி, திறன் பயிற்சிக்கான உதவித்தொகை ஆகியவற்றை வழங்கினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், பூட்டை கிராமத்தைச் சேர்ந்த கமலக்கண்ணன் அவர்கள் 14.11.2025 அன்று உடல்நலக் குறைவால் காலமானார். அவரது மனைவி திருமதி வசந்தி அவர்களும் 2017-ஆம் ஆண்டே உடல்நலக் குறைவால் காலமானார். இத்தம்பதியருக்கு 3 பெண், 1 ஆண் குழந்தைள் உள்ளனர்.

பெற்றோரை இழந்து தவிக்கும் நான்கு குழந்தைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியதோடு, அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து தரும் என்று உறுதியளித்தார். இந்த நான்கு குழந்தைகளும் இனி நம் அரசின் குழந்தைகள்! அவர்களது எதிர்காலத்தை அரசு பாதுகாக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது சமூகவலைதளப் பதிவில் தெரிவித்திருந்தார்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மறைந்த கமலக்கண்ணன் அவர்களின் மகள் – செல்வி லாவண்யாவிற்கு ரூ.2,50,000/- மதிப்பிலான வீட்டுமனைப் பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் ரூ.3,55,600/- மதிப்பீட்டில் வீடு கட்டுதவற்கு ஒதுக்கீடு ஆணை, சங்கராபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கணினி உதவியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணையினையும், மகள் செல்வி ரிஷிகா, மகன் செல்வன் அப்னேஷ் ஆகியோருக்கு அன்புக்கரங்கள் திட்டத்தின்கீழ் மாதம் தலா ரூ.2,000/- நிதி உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள், மகள் செல்வி ரீணாவிற்கு திறன் அழகுக் கலைப் பயிற்சி பெறுவதற்காக ரூ.6,000/- உதவித்தொகை ஆகியவற்றை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்.

ஓய்வு பெற்ற 42 பத்திரிகையாளர்களுக்கு மாதம் ரூ.12,000 ஓய்வூதியத்திற்கான ஆணைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.12.2025 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்குத் தலா 12 ஆயிரம் ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத்திற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு ஆணைகளை வழங்கினார்.

பத்திரிகையாளர்கள் முன்களப் பணியாளர்களாக அறிவிப்பு

பத்திரிகையாளர்கள் அன்றாட உலகச் செய்திகளை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் உடனுக்குடன் வெளியிடுவதோடு, அரசிற்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கி அரசு செயல்படுத்தும் திட்டங்களை மக்களிடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்.

எடுத்துச் செல்வதோடு, பேரிடர் காலங்களிலும் புயல், மழை, பெருவெள்ளத்தால் பொது மக்கள் பாதிக்கப்படும்போதும், பெரும் விபத்துகள், தொற்று நோய் பரவல்கள் முதலிய சோதனைக் காலங்களிலும் இரவு பகல் பாராது ஓய்வின்றிப் பணி செய்து, உண்மைச் செய்திகளைத் திரட்டி மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

பத்திரிகையாளர்களின் இத்தகைய பணியினைச் சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாட்டில் முதன்முறையாக உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

பத்திரிகையாளர் நலவாரியம் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகள்

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றப்பின், செய்தி மக்கள் தொடர்புத் துறையின்கீழ்ப் பத்திரிகையாளர் நலவாரியம் 01.12.2021 அன்று உருவாக்கப்பட்டு, உழைக்கும் பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கான நலத்திட்ட உதவிகள் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, கருச்சிதைவு உதவித் தொகை, கண் கண்ணாடி செலவுத் தொகை, இயற்கை மரணத்திற்கு உதவித் தொகை, ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய உதவித் தொகைகள் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வழங்கப்பட்டு வருகின்றன. பத்திரிகையாளர் நலவாரியத்தில் தற்போது வரை 3,674 நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, 81 பத்திரிகையாளர்களுக்கு ரூ.8,56,500/- உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளன.

பத்திரிகையாளர்களின் நலன் காத்திட செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள்

பத்திரிகையாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம், ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு நல நிதி, பத்திரிகையாளர் பணிக்காலத்தில் இயற்கை எய்த நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு உதவித்தொகை, குடும்ப ஓய்வூதியம், பத்திரிகையாளர் நல வாரியம் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பின்னர் பத்திரிகையாளர் நலன் காத்திட உயர்த்தப்பட்ட உதவித் தொகை

இவ்வரசு பொறுப்பேற்றபின், 18.07.2022 ஆம் நாளிட்ட அரசாணையின்படி, பணியிலிருந்து ஓய்வுபெற்றவுடன் வழங்கப்படும் பணிக்கொடை உச்சவரம்பு ரூ.3 இலட்சம் என்பதை ரூ.4 இலட்சமாக உயர்த்தி வழங்கி வருகிறது.

பத்திரிகையாளர் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.10,000/-லிருந்து ரூ.12,000/-ஆக 14.06.2023 முதல் உயர்த்தப்பட்டு, 356 பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.5,000/-லிருந்து ரூ.6,000/-ஆக ஜூன் 2023 முதல் உயர்த்தப்பட்டு 72 பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை 125 பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமும், 27 பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், இவ்வரசு பொறுப்பேற்றப் பின்னர் 59 பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு 2 கோடியே 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர்,புகைப்படக்காரர்,செய்தியாளர்,பிழை திருத்துநர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்த நேரிட்டால் அவர்கள் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி ரூ.1.25 இலட்சம் என்பதை ரூ.2.50 இலட்சமாகவும், ரூ.2.50 இலட்சம் என்பதை ரூ.5 இலட்சமாகவும், ரூ.3.75 இலட்சம் என்பதை ரூ.7.50 இலட்சமாகவும், ரூ.5 இலட்சம் என்பதை ரூ.10 இலட்சமாகவும் இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்படுகிறது.

பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து மருத்துவ உதவித்தொகை

பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்பட்டு வரும் மருத்துவ உதவித் தொகை ரூ.2,00,000/-லிருந்து ரூ.2,50,000/-ஆக 19.07.2022 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை 16 பத்திரிகையாளர்களுக்கு 30 இலட்சத்து 61 ஆயிரத்து 339 ரூபாய் மருத்துவ உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

42 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியத்திற்கான ஆணைகள் வழங்குதல்

பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வுபெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்குத் திராவிட மாடல் அரசு, பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் மாதந்திர ஓய்வூதியமாகத் தலா ரூ.12 ஆயிரம் வழங்கிட 27.11.2025 அன்று அரசாணை வெளியிட்டது.

அதன்படி, பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்கும் தலா 12 ஆயிரம் ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத்திற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

“நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டம் மூலம் 9,86,732 நபர்கள் பயனடைந்துள்ளனர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
ஆய்வு - 02.12.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 02.12.2025 அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

2025-2026-ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில், உயர் மருத்துவச் சேவைகள் வழங்க மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதன்படி, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 02.08.2025 அன்று சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொடங்கி வைத்தார். இந்த உயர் மருத்துவச் சேவை சிறப்பு முகாம் ஒன்றிற்கு 1.08 இலட்சம் ரூபாய் வீதம் மாநிலம் முழுவதும் மொத்தம் 1,256 முகாம்களுக்கு ரூ.13.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்முகாம்கள் சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரகப் பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு, உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர், சமூக-பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இம்முகாம்களில் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் மாநிலம் முழுவதும் இதுவரை 632 முகாம்கள் நடத்தப்பட்டு, 9,86,732 பேர் பயனடைந்துள்ளனர்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களுக்கு வரும் மக்களுக்கு குடிநீர், இருக்கை வசதிகள், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என்றும், முகாம்களுக்கு வருகை தரும் மக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கிட போதுமான அளவிற்குத் தன்னார்வலர்களை நியமிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், முகாம்கள் நடைபெறுவது குறித்துப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் விளம்பரம் செய்து, மக்களுக்கு முகாம்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என்றும், தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்காகத் தனியாக அறை ஏற்படுத்திட வேண்டும் என்றும், வருகை தரும் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு முகாம்களில் உரிய வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அத்துடன் இம்முகாம்களில் நோய் கண்டறியப்பட்டு, மேல் சிகிச்சைக்காகப் பரிந்துரை செய்யப்படுபவர்கள் தொடர் சிகிச்சை மேற்கொள்வதை உறுதி செய்திட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

மகாகவி பாரதியார் அவர்கள் பிறந்த நாள்

படமும் / செய்தியும்

தமிழ்நாடு அரசின் சார்பில், 11.12.2025 அன்று மகாகவி பாரதியார் அவர்களின் 144-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், செய்தி மக்கள் தொடர்புத் துறைக் கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) முனைவர் இரா.பாஸ்கரன், விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு.வி.ஜி.சந்தோசம் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

குடிமைத் தேர்வுகளில் நான் முதல்வன் திட்டத்தால் இலக்குகளை எளிதில் ஈட்டி இளைஞர்கள் படிப்படியாக வெற்றி குவிக்கின்றனர்!

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்களின் அறிக்கை - 28.12.2025

தமிழ்நாட்டுப் போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்கான ஒரு புதிய சூழலில் கடந்த அரை நூற்றாண்டிற்கும் மேலாக, இந்தியாவின் சமூகவளர்ச்சிப்பாதையில்தமிழ்நாடுமுன்னணியில் இருந்து வருகிறது. கல்வியும் வாய்ப்புகளும் ஒரு சிலருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையின் மீதே மாநிலத்தின் இந்த முன்னேற்றம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்தத்துவம் தலைமுறை பலவற்றை வறுமையிலிருந்து மீட்டெடுத்ததுடன், எழுத்தறிவை விரிவுபடுத்தி, இந்தியாவில் சமூக ரீதியாக மிகவும் முன்னேறிய சமூகங்களில் ஒன்றாகத் தமிழ்நாட்டை மாற்றியது.

இருப்பினும், 2017-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரு கசப்பான உண்மை வெளிவரத் தொடங்கியது: தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில், குறிப்பாக ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வாணையம் (UPSC) நடத்தும் குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டின் பங்களிப்பு படிப்படியாகக் குறைந்து வந்தன. இதற்குத் தரமான பயிற்சி பெறுவதில் உள்ள ஏற்றத் தாழ்வுகள், அதிகப்படியான நிதிச் சுமைகள், போட்டித் தேர்வுகளுக்கு வழிகாட்டத் தேவைப்படும் முறையான கட்டமைப்பு வசதிகள் இல்லாததுமே முக்கியக் காரணங்களாக அமைந்தன. குறிப்பாக, பெருநகரங்களுக்கு வெளியே கிராமங்களில் வசிக்கும் மாணவர்களுக்கு முறையான வழி காட்டல் கிடைக்கவில்லை. இதனால், 2021-ஆம் ஆண்டில் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 27 ஆக மிக மிகச் சரிந்தது.

திறமையான நிருவாகிகளையும், சீர்திருத்தச் சிந்தனை கொண்ட அதிகாரிகளையும் உருவாக்கிய பெருமை மிக்கத் தமிழ்நாட்டிற்கு, இந்தச் சரிவு ஏமாற்றத்தை அளித்ததோடு மட்டுமல்லாமல், ஒரு உடனடி மாற்றத்திற்கான தேவையையும் உணர்த்தியது.

நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் (NMCE): ஓர் எண்ணம் நிறுவனமாக உருவெடுத்த கதை

இந்தச் சரிவைக் கண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள் 2023 மார்ச் 7 அன்று தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின்கீழ் 'நான்

முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு' (NMCE) என்ற புதிய பிரிவை உருவாக்குமாறு எனக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்தத் திட்டம் ஒரு அலுவலகக் கூட்டத்தில் மட்டும் உருவானது அல்ல; பல்வேறு மாவட்டங்களில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்களுடன் நடத்திய உரையாடல்களின் விளைவாக உருவாக்கப்பட்டது. அவர்களில் பலர் கூறியது ஒன்றே: "படிக்க வேண்டும் என்ற ஊக்கம் இருந்தது, ஆனால் தொடருவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் இல்லை."

'நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு' என்பது ஒரு குறுகிய கால மானிய உதவி அல்ல, அது ஒரு கட்டமைப்புச் சீர்திருத்தம். போட்டித் தேர்வுகளை எளிதில் அணுகக் கூடியதாகவும், குறைந்த செலவிலானதும், கட்டுப்படியாகக் கூடியதாகவும், இலட்சியக் கனவாகவும் மாற்றுவதே இதன் நோக்கம். சமூக நீதியின் முன்னோடியான தமிழ்நாடு, நவீன வேலை வாய்ப்புகளில் சம வாய்ப்பை உறுதி செய்வதிலும் முன்னோடியாக இருக்கும் என்ற நம்பிக்கையை இளைஞர்களிடையே மீட்டெடுப்பதே இதன் குறிக்கோள்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான, ஒவ்வொரு மாணவரையும் முதல் தலைமுறை வெற்றியாளராக மாற்றும் 'நான் முதல்வன்' திட்டத்தின் ஒரு பகுதியாக இது செயல்படுகிறது.

சமமற்ற சூழலுக்கான ஒரு கட்டமைக்கப்பட்ட தீர்வு

சென்னை அல்லது டெல்லி போன்ற நகரங்களில் உள்ள மாணவர்களுக்குச் சிறந்த பயிற்சி மையங்கள் எளிதில் கிடைத்தன. ஆனால், கடலூர் அல்லது திண்டுக்கல் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் போதிய பாடப் புத்தகங்கள், வழிகாட்டுதல்கள் இன்றித் தவித்தனர். பல திறமையான மாணவர்கள் பயிற்சி செலவையோ அல்லது வெளியூர் சென்று தங்குவதற்கான செலவையோ ஏற்க முடியாமல் பாதியிலேயே படிப்பைக் கைவிட்டனர்.

இந்த ஏற்றத் தாழ்வைச் சரிசெய்ய 'நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு' மூன்று தூண்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது:

1) நிதிஉதவி தொழில் முறைப் பயிற்சி,

2) தங்கும் வசதியுடன் கூடிய பயிற்சித் திட்டங்கள்,

3) தாக்கத்தை ஏற்படுத்தும் உதவித் திட்டங்கள்.

2023-2024ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட ஒன்றிய அரசுப் பணியாளர் ஆணையத்தின் குடிமைப் பணித் தேர்வு ஊக்கத் தொகைத் திட்டத்தின்கீழ், ஆண்டுதோறும் 1,000 மாணவர்கள் வெளிப்படையான தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு முதல் நிலைத் தேர்வுக்குத் (Preliminary) தயாராக மாதம் ரூ.7,500 வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. முதன்மைத் தேர்வுக்குத் (Mains) தகுதி பெறுவோருக்கு ரூ.25,000 ஒருமுறை ஊக்கத் தொகையாகவும், 2025 முதல் நேர்முகத் தேர்வுக்குத் (Personality Test) தகுதி பெறுவோருக்கு ரூ.50,000 தொகையும் வழங்கிட திராவிட மாடல் அரசு முன்வந்து உதவிக்கரம் நீட்டியது.

இதன்பின் மாணவர்கள் பங்கேற்பும், அரசின் உதவிகளும் ஊக்கப்படுத்தியதால் போட்டித் தேர்வு முடிவுகள் இத்திட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்தியுள்ளன.

2023-2024 ஆம் ஆண்டில், 453 மாணவர்கள் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றனர்.

2024-2025 ஆம் ஆண்டில், இந்தஎண்ணிக்கை 559 ஆக உயர்ந்தது. அவர்களில் 134 பேர் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்று, 50 பேர் இறுதிப் பட்டியலில் இடம் பெற்றனர். அவர்களில் ஒருவரான திரு.சிவச்சந்திரன் அகில இந்திய அளவில் 23-வது இடத்தைப் பிடித்து தமிழ்நாட்டில் முதலிடம் பெற்றார் .

2025-2026 ஆம் ஆண்டில், 659 பேர் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். 155 பேர் நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெற்றுள்ளனர், இவர்களில் 87 பேர் திராவிட மாடல் அரசின் அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையத்தில் (AICSCC) பயிற்சி பெற்றவர்கள் என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் துடிப்பான தூய தமிழர் நேய உணர்வுக்குக் கிடைத்துள்ள மகத்தான வெற்றியாகும்.

இத்தகைய புள்ளி விவரங்களுக்கும் மேலாக வெற்றி என்பது ஒருவரது பொருளாதார நிலையைப் பொறுத்தது அல்ல, அவருடைய உழைப்பைப் பொறுத்தது என்ற நம்பிக்கையை இது மீட்டெடுத்துள்ளது, இது ஒரு சமூக மாற்றத்தின் சான்று.

'நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின்' உண்மையான வெற்றி அதன் புள்ளி விவரங்களில் இல்லை, அது ஏற்படுத்திய உளவியல் மாற்றத்தில் உள்ளது. இன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள இளைஞர்கள் தேசியத் தேர்வுகளை எளிதில் எட்டிப் பிடிக்கக்கூடிய வெற்றி இலக்குகளாகப் பார்க்கின்றனர். சிறிய நகரங்களில் பரவிவரும் இந்தத் தன்னம்பிக்கையே இத்திட்டத்தின் மிகப்பெரிய வெற்றிக்கு சீரிய சான்றாகும்.

ஒரு ஏழை பீடித் தொழிலாளியின் மகள் ஐ.பி.எஸ் அதிகாரி ஆனார்

இந்த மகத்தான வெற்றிக்கு எடுத்துக்காட்டு தென்காசியைச் சேர்ந்த எஸ். இன்பா என்பவரின் கதை ஒரு சிறந்த உதாரணம். ஓய்வு பெற்ற பேருந்து நடத்துநர், பீடித் தொழிலாளியின் மகளான இவர், மாவட்ட நூலகத்தைத் தனது இரண்டாவது இல்லமாக மாற்றிக் கொண்டார். 'நான் முதல்வன்' திட்டத்தின் பயனாக, 2023ஆம் ஆண்டுக்கான குடிமைப் பணித் தேர்வில் தேர்ச்சி பெற்று இவர் ஐ.பி.எஸ். (I.P.S.) அதிகாரியாகத் தேர்வு செய்யப்பட்டார். இவருடைய வெற்றி தனிப்பட்ட ஒன்றல்ல; தடைகள் நீக்கப்பட்டால், சாதனைகளை நிகழ்த்தி மாற்றங்களைப் படைப்பவர்கள் தமிழர்கள் என்பதற்கான அடையாளம் ஆகும்.

தங்கும் வசதியுடன் கூடிய பயிற்சி (Residential Coaching)

குடிமைப் பணித் தேர்வுகளுக்கு அப்பால், ஒன்றிய அரசுப் பணித் தேர்வு - SSC, இரயில்வே, வங்கித் தேர்வுகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் தங்குமிடம், உணவு, பயிற்சி உள்ளிட்ட வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

முதல் ஆண்டில் பயிற்சி பெற்ற 510 மாணவர்களில், 80 பேர் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், இரயில்வே துறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2025 அக்டோபரில் இரண்டாம் கட்டப் பயிற்சிகள் கூடுதல் வசதிகளுடன் தொடங்கப்படுகின்றன.

தருமபுரியைச் சேர்ந்த கே. புவனேஸ்வரி என்ற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவி, இந்தத் திட்டத்தின் மூலம் பஞ்சாப் நேஷனல் வங்கியில் வேளாண் அதிகாரியாகப் (Agriculture Field Officer) பொறுப்பேற்றுள்ளார். வருமானமோ அல்லது இருப்பிடமோ ஒருவரின் வெற்றிக்குத் தடையல்ல என்பதை இது நிரூபிக்கிறது.

வெளிப் படைத்தன்மை மற்றும் பொது நம்பிக்கை

புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இத்திட்டத்தில் முழுமையான வெளிப் படைத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது: தகுதி அடிப்படையில் தேர்வு, நேரடியாக வங்கிக் கணக்கில் உதவித் தொகை, முறையான தணிக்கை ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

'நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு' மூலம், தமிழ்நாடு ஒரு உள்ளடக்கிய, தகுதி அடிப்படையிலான பொதுச் சேவைப் பாரம்பரியத்தை மீண்டும் உயிர்ப்பித்துள்ளது. சிறந்து விளங்குவதும், சமத்துவத்தைப் பேணுவதும் ஒன்றிற்கொன்று முரணானவை அல்ல, மாறாக அவை ஒன்றை ஒன்று முழுமைப்படுத்துபவை என்ற செய்தியை இது உலகிற்குப் பறைசாற்றுகிறது!

மக்கள் போற்றிய மகத்தானத் திட்டங்கள்

"ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம்"

ஏழைக்கு, இல்லாதவருக்கு, பசியோடு இருக்கின்ற பாமர மனிதனுக்கு, நடுத்தர மக்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கையிலே, அவர்களுடைய துன்பத்திலே செலவு ஓரளவு குறையவும், செலவைச் சிக்கனப்படுத்தவும், பசி என்பதை என்னவென்று தெரியாமல் மக்களை மகிழ்ச்சியாக வாழ வைக்கவும், ஏழை எளிய மக்களுக்காக அறிஞர் அண்ணா அவர்களுடைய எண்ணங்களிலேயே தோன்றிய கனவுத் திட்டமான "ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம்" சென்னை, இராதாகிருஷ்ணன் நகரில் 15.09.2008 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

"தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் உணவுத் திட்டம்"

தூய்மைப் பணியாளர்கள், அவர்களைச் சார்ந்தோரின் நலன் கருதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2007 ஆம் ஆண்டு தூய்மைப் பணியாளர் நல வாரியம் அமைக்கப்பட்டது. அவரின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசானது, தூய்மைப் பணியாளர்களின் நல்வாழ்விற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் காலை, மதியம், இரவு எனச் சுழற்சி முறையில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும், "தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத் திட்டம்" சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 15.11.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

2025ஆம் ஆண்டு குறுவைப்பருவத்தில் 6.13 இலட்சம் ஏக்கர் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுச் சாதனை...

★ 2021ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்துவருகிறது. வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளின் நலன் காக்கவும், அவர்களின் பொருளாதாரம் மேம்படவும் எண்ணற்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

★ இத்திட்டங்களில் சாகுபடிப் பரப்பு, உற்பத்தியினை அதிகரிக்கவும், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டிச் சந்தைப்படுத்தவும் தமிழ்நாடு அரசு பல்வேறு மானியங்கள் வழங்குவதுடன், சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்களான விதைகள், உரங்கள், உயிர் உரங்கள், பயிர்பாதுகாப்பு மருந்துகள் தங்குதடையின்றி உரிய காலத்தில் கிடைத்திடவும் உறுதி செய்கிறது.

★ இதன் அடிப்படையில், நெல் சாகுபடி அதிகப் பரப்பில் மேற்கொண்டு, உற்பத்தியை அதிகரித்திட, ஒவ்வொரு ஆண்டும் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தியது போன்றே நடப்பு ஆண்டிலும் "குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம்" 82 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், தமிழ்நாட்டில் முதன்முறையாக கார்/ குறுவை/சொர்ணவாரி பருவத்திற்கான "சிறப்புத் தொகுப்புத் திட்டம்" 132 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

★ மேலும், டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி அதிகப் பரப்பில் மேற்கொள்ள மேட்டூர் அணைப் பாசனத்திற்காக ஜூன் 12ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது.

★ இவ்வாறு தமிழ்நாடு எடுத்த சீரிய நடவடிக்கைகளால் முன் எப்போதும் இல்லாத வகையில் 2025ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் 6.13 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது 2024ஆம் ஆண்டை விட 2.25 இலட்சம் ஏக்கர் அதிகமாகும்.

★ தற்போது, டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் அறுவடை முழுவீச்சில் நடைபெறுவதால், சம்பா நெற்பயிர் சாகுபடி அடுத்த பத்து தினங்களில் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுநாள்வரை, சம்பா பருவ நெற்பயிர் சாகுபடி 2.64 இலட்சம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே வேளையில் 5.50 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது.

★ இந்த ஆண்டு, குறுவைப் பருவத்தில் அதிகப்பரப்பில் நெல்சாகுபடி மேற்கொள்ளப்பட்டதாலும், சாதகமான சூழ்நிலை நிலவியதால் இயல்பாகச் சம்பா பருவ நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், குறுவை சாகுபடி மேற்கொண்டதாலும், தற்போதுவரை குறுவை நெல் அறுவடை 52 சதவிகிதம் மட்டுமே செய்யப்பட்டிருப்பதாலும், வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி காரணமாகத் தொடர் மழை இருப்பதாலும் சம்பா நெல் சாகுபடி தாமதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிப் பரப்பான 6.13 இலட்சம் ஏக்கரில் 80 சதவிகிதப் பரப்பில் அதாவது சுமார் 5 இலட்சம் ஏக்கரில் தாளடி பருவ நெல் சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது.

★ மேலும், தற்போது 5,438 ஏக்கரில் நெல் நாற்றங்கால் தயார் நிலையில் உள்ளதாலும், மேட்டூர் அணையில் பாசனத்திற்குப் போதிய நீர் இருப்பு (83.14 டி.எம்.சி) உள்ளதாலும், வடகிழக்குப் பருவமழை பரவலாகப் பல்வேறு பகுதிகளில் பெய்துவருவதாலும், மத்திய, நீண்டகால நெல் இரக விதைகள், போதுமான அளவில் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு உள்ளதாலும், சம்பா, தாளடி நெல் சாகுபடி இயல்பு பரப்பான 13 இலட்சம் ஏக்கருக்கும் கூடுதலாக மேற்கொள்ளப்படும்.

★ சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ளவிருக்கும் விவசாயிகள் அனைவரும் தங்களது வட்டார வேளாண்மை உதவி இயக்குநரைத் தொடர்பு கொள்ளுமாறும், விதை தேவைக்கு அருகாமையிலுள்ள வேளாண் விரிவாக்க மையத்தை அணுகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஜனவரி 30: அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள்

"காந்திஜி"

சத்தியாக்கிரகப் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஒரு தடவை காந்திஜி 'கராடி' என்ற ஊரில் தங்கியிருந்தார். ஒரு நாள் கிராம மக்களின் கூட்டம் ஒன்று ஊர்வலமாக சென்று கொண்டிருந்ததைப் பார்த்தார். ஊர்வலத்தின் முன்னிலையில் பெண்கள் தேசியக் கொடியை ஏந்தியிருந்தனர். கொட்டும் முழங்கிக் கொண்டிருந்தது. இவர்கள் சத்தியாக்கிரகம் செய்யப் போகிறார்களா? அப்படியென்றால் ஆண்களின் கைகளில் பழங்கள், பூக்கள் முதலியன ஏன்? என்று காந்திஜி சிந்திக்கலானார்.

இவ்வாறு சிந்தித்துக்கொண்டே வெளியே வந்த போது, கூட்டத்தினர் வாழ்க! வாழ்க! என்று கோஷமிட்டுக் கொண்டு வந்து அவரை வணங்கி நின்றனர். மேலும், தாங்கள் கொண்டுவந்த வெகுமதிகளை மலரடிகளில் சமர்ப்பித்தார்கள்.

நீங்கள் வந்த நோக்கம் என்ன? இந்த மேளக்கொட்டு ஏன்? என்று அவர்களைக் கேட்டார்.

ஊர்வலத்தின் முன் வந்த தலைவர் காந்திஜியிடம் மகாத்மாஜி எங்கள் கிராமத்தில் தண்ணீர் பஞ்சம் எப்போதும் இருந்து வந்தது. கோடைக்காலமும் வந்து விட்டது. கிணறுகள் வற்றிப்போய் விட்டன. ஆனால், நீங்கள் இங்கே வந்ததும் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. இக்கிராமத்தில் தங்கள் திருவடிகள் பட்டதும் கிணறுகளில் தண்ணீர் பெருகி விட்டது. எனவே, எங்கள் நன்றியைத் தெரிவிக்கவே இந்தப் பரிசுகளைக் கொண்டுவந்துள்ளோம் என்று மிக்க பணிவுடன் கூறினார்.

காந்திஜி சற்றுக் கடுமையான குரலில் நீங்கள் என்ன பைத்தியக்காரர்களா? என் வருகைக்கும், இந்தத் தண்ணீருக்கும் என்ன தொடர்பு? கடவுளை நான் பணிக்க முடியுமா? ஆண்டவனிடம் உங்கள் குரலுக்கும், என் குரலுக்கும் ஒரே மதிப்புத்தான் என்பதை அறியமாட்டீர்களா? என்று வினவினார்.

கிராம மக்கள் இதைக் கேட்டுத் தலை குனிந்தனர். காந்திஜி சிரித்துக் கொண்டே சொன்னார், நண்பர்களே ஒரு மரத்தின் மேல் ஒரு காகம் உட்கார்ந்த நேரத்தில், தற்செயலாக அம்மரத்தின் கிளையொன்று முறிந்து விட்டால், அதற்குக் காரணம் அக்காகமே என்று நீங்கள் சொல்வீர்களா? உங்கள் கிராமக் கிணறுகளில் தண்ணீர் பெருகுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம், ஒருக்கால் பூமிக்கடியில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கலாம் அதனால், புது ஊற்றுக் கிளம்பியிருக்கலாம், நீங்கள் இவ்வாறு குழந்தைகளைப் போன்று கற்பனை செய்யக் கூடாது. சரி, நீங்கள் எல்லோரும் இராட்டையினால் நூல் நூற்க வேண்டும். பாரத அன்னைக்கு நிறைய ஆடை தேவை, என்று உழைக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார்.

— காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்
என்னும் நூலிலிருந்து...

அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாக்க முன்னோடித் திட்டம்...

தெரிந்துகொள்வோம்

- தமிழ்நாடு அரசு, அழிவின் விளிம்பில் உள்ள சிங்கவால் குரங்கு, சென்னை முள்ளெலி, வரிக் கழுதைப்புலி, கூம்பு-தலை மஹ்சீர் மீன் ஆகிய உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு முன்னோடித் திட்டத்தைத் தொடங்குகிறது.

- மார்ச் 2025இல் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம், தமிழ்நாட்டின் பல்லுயிர்ப் பாதுகாப்பு உத்தியின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைக் குறிக்கிறது, பெரிய உயிரினமான யானைகள், புலிகள் போன்றே சுற்றுச்சூழல் சமநிலையைப் பராமரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது. இது தொடர்பாகச் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசாணை வெளியிட்டுள்ளது.

- மேற்கு, கிழக்குத் தொடர்ச்சி மலைகளைக் கொண்ட தமிழ்நாடு, உலகளவில் பல்லுயிர்ப் பெருக்க மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- பாதுகாப்பு முயற்சிகள் வரலாற்று ரீதியாக உயிரினங்களில் கவனம் செலுத்தியுள்ளன. ஆனால், விளிம்பின் நிலையில் அறியப்பட்ட உயிரினங்கள் வாழ்விட இழப்பு, வேட்டையாடுதல், சாலை இறப்பு, சுற்றுச்சூழல் புறக்கணிப்பு, ஆக்கிரமிப்பு அழுத்தங்கள் காரணமாகத் தொடர்ந்து அழிவின் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன.

- இந்த இனங்கள் ஒவ்வொன்றும், எப்போதும் பொதுமக்களின் பார்வையில் இல்லாவிட்டாலும், மகரந்தச் சேர்க்கை, விதை பரவல், நோய்க் கட்டுப்பாடு, நீர் அமைப்பு, மறுசீரமைப்புப் போன்ற செயல்பாடுகள் மூலம் சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத பங்களிப்பை வழங்குகின்றன.

- இந்தத் திட்டம் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த நான்கு இனங்களை இலக்காகக் கொண்டுள்ளது.

- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் அழிந்துவரும் விலங்கினமான சிங்கவால் குரங்குகள் வரையறுக்கப்பட்ட வனப்பகுதிகளில் வாழ்கிறது. இரவு நேர, மறைவு வாழ்க்கை முறை கொண்ட சென்னை முள்ளெலி, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளாவின் வறண்ட நிலப்பரப்புகளில் காணப்படுகிறது, இருப்பினும் இது போதுமான அளவு ஆய்வு செய்யப்படாமலும் பாதுகாப்பின்றியும் உள்ளது.

- கிட்டத்தட்ட அச்சுறுத்தலுக்கு உள்ளான இனமாகவும் இயற்கைத் தோட்டியாகவும் இருக்கும் வரிக் கழுதைப்புலி, நோய்களைக் கட்டுப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது, ஆனால் முதுமலைப் புலிகள் காப்பக நிலப்பரப்பில் விரைவான சரிவை எதிர்கொள்கிறது. மோயார் ஆற்றில் ஒரு காலத்தில் ஏராளமாக இருந்த கூம்பு-தலை மஹ்சீர் மீன், இப்போது அணை கட்டுமானம், அழிவுகரமான மீன்பிடி நடைமுறைகள், மாசுபாடு, ஆக்கிரமிப்பு காரணமாக மிகவும் அழியும் நிலையில் உள்ளது.

- சிங்கவால் குரங்கு பாதுகாப்புக்காக மொத்தம் ரூ.48.50 இலட்சம், மெட்ராஸ் முள்ளம்பன்றிக்கு ரூ.20.50 இலட்சம், வரி கழுதைப்புலிக்கு ரூ.14 இலட்சம், கூம்புத் தலை மஹ்சீருக்கு ரூ.17 இலட்சம் என மொத்தம் ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- இந்த நிதி வாழ்விடக் கண்காணிப்பு, நீண்டகால மக்கள் தொகை ஆய்வுகள், பாதுகாப்பு இனப்பெருக்க மையங்களை அமைத்தல், சிங்கவால் குரங்குகளைப் பாதுகாக்க சுற்றுச்சூழல் ஆய்வுகள். வன இணைப்பை உறுதி செய்வதற்கான பாலங்கள், பள்ளிகள், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு, கல்வித் திட்டங்கள், பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் அறிவிப்புப் பலகைகள், முன்னணி வன ஊழியர்களுக்கான பயிற்சி ஆகியவை அடங்கும்.

- கூம்புத் தலை மஹ்சீருக்கு, ஆற்றங்கரை மீன்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அவற்றின் வசிப்பிடத்திலேயே வளர்ப்பு, இனப்பெருக்கம், விடுவிப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

- இந்த முயற்சியின் விளைவுகள் தொலைநோக்குடையதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள்தொகை நிலை, அச்சுறுத்தல்கள், வாழ்விடத் தரம் குறித்த அடிப்படைத் தரவு முறையாக உருவாக்கப்படும், இது நீண்டகால உத்திகளுக்கு அறிவியல் அடித்தளத்தை வழங்கும். பாதுகாப்பு நடவடிக்கைகள் மனித-வனவிலங்கு மோதலைக் குறைக்கும், சுற்றுச்சூழல் மீள்தன்மையை மேம்படுத்தும், மேலும் முக்கிய முயற்சிகளில் பெரும்பாலும் அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாக்க மாநிலத்தின் தயார்நிலையை வலுப்படுத்தும்.

- சமூகங்கள் தீவிரமாக ஈடுபடும், இந்த அழிந்துவரும் உயிரினங்கள் குறித்த விழிப்புணர்வு, உரிமை, நேர்மறையான அணுகுமுறைகளை வளர்க்கும்.

- வனத்துறை ஊழியர்களின் திறன் மேம்படுத்தப்படும், அதே நேரத்தில் மழைக்காடுகள், வறண்ட நிலங்கள், நதி அமைப்புகள் போன்ற முக்கியமான வாழ்விடங்களின் சுற்றுச்சூழல் ஆரோக்கியம் நீண்டகால முன்னேற்றத்தைக் காணும்.

- தமிழ்நாட்டின் இந்த அறிவிப்பானது அழிவின் விளிம்பில் உள்ளவற்றைப் பாதுகாப்பதற்கான ஒரு மைல்கல் ஆகும்.

- இதில் 2022ஆம் ஆண்டில் பாக் விரிகுடாவில் இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்புக் காப்பகம் உருவாக்கப்பட்டது, 2022இல் கடவூர் தேவாங்கு சரணாலயம், 2023இல் நீலகிரி வரையாடு திட்டம் தொடங்கப்பட்டது ஆகியவை அடங்கும்.

- சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியமான உயிரினங்களைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், தமிழ்நாடு மீண்டும் ஒருமுறை பல்லுயிர்ப் பாதுகாப்பில் தனது தனித்தன்மையை நிரூபித்துள்ளது.

- இந்த முயற்சி குன்மிங்-மாண்ட்ரீல் உலகளாவிய பல்லுயிர்க் கட்டமைப்பின் 30x30 இலக்குகளுடன் ஒத்துப்போகிறது, இது உலகளாவிய காலநிலை, பல்லுயிர் இலக்குகளுக்கான தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மனதிற்குப் பிடித்த திட்டம் "தாயுமானவர் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 12.08.2025 அன்று தொடங்கி வைத்த "தாயுமானவர் திட்டம்" என்ற புதிய திட்டத்தின் சிறப்பு குறித்து விவரிக்கவும் என்று கடந்த டிசம்பர் மாத தமிழரசு இதழில் கேட்கப்பட்ட தலைப்பிற்குத் தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ந.பன்னீர் செல்வம் அவர்கள் தமிழரசு இதழுக்கு அனுப்பிய கட்டுரை.

முகவுரை

தமிழ்நாடு அரசு தொடங்கி செயல்படுத்தப்பட்டுவரும் தாயுமானவர் திட்டம் என்ற சிறப்பான திட்டமாக வெற்றி நடைபோடும் இந்தியாவிற்கே முன்மாதிரி முயற்சி என்றால் மிகையாகாது. இது பற்றி அறியலாம்.

தாயுமானவர் திட்டம்

மூத்த குடிமக்கள் மாற்றுத்திறனாளிகள் நலன் கருதி அவர்கள் ரேசன் கடைக்குச் சென்று பொருள் வாங்கி வருவதில் சிரமம் கருதி நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளம் கொண்டு வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் அவர்களது வீட்டிற்கே சென்று ரேசன் பொருட்கள் வழங்கப்படும் சேவையைத் தாயுமானவர் திட்டம் எனத் தொடங்கி செயல்பட்டுவருகின்றது.

ரேசன் பொருள் வழங்கும் சேவை

மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் வயது முதிர்ந்தவர், மாற்றுத்திறனாளி அவர்களது வீட்டிற்கே சென்று ரேசன் பொருட்கள் விநியோகம் செய்து வருவது மிகச்சிறந்த சேவையாகும்.

செயல்பாடு

இந்தத் திட்டம் 34,809 நியாய விலைக் கடைகள் மூலம் 20,42,657 எண்ணிக்கையிலான எழுபது வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களும், 1,27,797 எண்ணிக்கையிலான மாற்றுத்திறனாளிகள் உட்பட மொத்தம் 21,70,454 பயனாளிகள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றது

இந்தத் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ரூ.30.16 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

மனதிற்குப் பிடித்த திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனதிற்குப் பிடித்த "தாயுமானவர் திட்டம்" 12.08.2025 அன்று சென்னை, தண்டையார்பேட்டையில் தொடங்கப்பட்டது.

01.11.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி. 70 வயது முதியவர் என்பதை 65 வயது முதியவர் என குறைத்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது.

காலை உணவு பள்ளியில் உண்பது அவர்களை உற்சாகமாக்கி, வயிற்றுப் பசி நீக்கி, அறிவுப் பசியை தீர்த்துக்கொள்ள ஏதுவாகிறது...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கம் மூலம் நகர்புற அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் பெறும் நன்மைகள் குறித்து விவரிக்கவும் என்று கடந்த நவம்பர் மாத இதழில் கேட்கப்பட்ட தலைப்பிற்கு, மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த நல்லாசிரியர் திருமதி ஜ.சத்தியபாமா முருகன் அவர்கள் தமிழரசு இதழுக்கு அனுப்பிய கட்டுரை

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், குழந்தைகளின் இதயம் தொட்ட திட்டமாகும். மாணவர்களுக்கு நல்ல ஊட்டச்சத்து நிறைந்த உணவும், தினந்தோறும் பருப்புடன் கூடிய காய்கறி சாம்பாரும் சரிவிகித உணவின்கீழ் வருகிறது.

நகர் பகுதிகளில் இயந்திரமயமாகிப்போன வாழ்க்கையில் அவரவர் பணிக்குச் செல்லும் சூழலில், காலை உணவை குழந்தைகள் பள்ளியில் சாப்பிட்டுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடனும், நிம்மதியுடனும் பெற்றோர்கள் பணிக்குச் செல்கின்றனர். பெற்றோர்களின் பரபரப்பும், பதட்டமும் பெருமளவில் குறைகிறது.

காலை உணவைப் பள்ளியில் உண்பது அவர்களை உற்சாகமாக்கி, வயிற்றுப் பசி நீங்கி அறிவுப் பசியைத் தீர்த்துக் கொள்ள ஏதுவாகிறது.

காலை உணவுடன் வெந்நீரும் வழங்கப்படுகிறது. தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிக்கும் பொழுது கிருமிகள் அழிந்து விடுகின்றன.

இயந்திரமயமான நகர வாழ்க்கையில் பெற்றோருக்கு இப்பணிகளைச் செய்வது கூடுதல் சுமை என்பதில் எள்ளின் முனையளவும் மாற்றுக்கருத்து இல்லை.

மாணவ, மாணவிகளின் இடைநிற்றல் குறைந்துள்ளது. வருகை, கற்றல்திறன் அதிகரித்துள்ளது. தினந்தோறும் சரிவிகித உணவு கிடைப்பதால் ஆரோக்கியமும் மேம்பாடும் அடைந்துள்ளது.

மொத்தத்தில், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவிகளின் இதயங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இடம் பிடித்துள்ளார் என்பதில் நெல்லின் முனையளவும் சந்தேகமில்லை. ■

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

பயிற்சி வினா - விடைத்தாள்

1. மாநிலத் தகவல் ஆணையம் பற்றிய கீழ்கண்ட கூற்றுகளைக் கவனி, தவறானவற்றைக் கண்டறிக.

   (i) ஆணையம் ஒரு தலைமை ஆணையரையும் ஐந்துக்கு மிகாமல் தகவல் ஆணையர்களையும் கொண்டிருக்க வேண்டும்.

   (ii) மாநிலத் தகவல் ஆணையர்கள் பணியில் அமர்த்தப்பட்ட பிறகு மீண்டும் மறு நியமனத்திற்குத் தகுதியுடையோர் அல்ல.

   (iii) மாநிலத் தகவல் ஆணையரை ஆளுநர் பதவி நீக்கம் செய்ய முடியும்.

   (iv) மாநிலத் தகவல் ஆணையத்துக்கு, ஆணையர்களைப் பரிந்துரைக்கும் குழுவில் மாநிலத்தின் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியும் ஒரு உறுப்பினர்.

   (A) (ii) மற்றும் (iv) தவறு
   (B) (ii) மற்றும் (iii) தவறு
   (C) (i) மற்றும் (iv) தவறு
   (D) (i) மற்றும் (ii) தவறு

2. மாநில மனித உரிமை ஆணையம், மனித உரிமை மீறல்கள் தொடர்பான மீறல்களை விசாரிக்க கீழ்க்கண்ட பட்டியலில் இருந்து மேற்கொள்ளலாம்

   (A) மாநிலப் பட்டியல்
   (B) ஒன்றியப் பட்டியல்
   (C) மாநில, பொதுப் பட்டியல்
   (D) மாநில, ஒன்றிய, பொதுப் பட்டியல்

3. பொருத்துக.

விதி		பொருள்
(a) 124 C	–	1. உச்ச நீதிமன்றத்தின் இருப்பிடம்
(b) 125	–	2. நாடாளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம்
(c) 126	–	3. ஊதியங்கள்
(d) 130	–	4. இடைக்காலத் தலைமை நீதிபதி நியமனம்

	(a)	(b)	(c)	(d)
(A)	2	3	4	1
(B)	1	4	3	2
(C)	2	1	3	4
(D)	4	3	2	1

4. பின்வரும் ஆணையங்களை, அதன் அமைப்பின் கால வரிசைப்படி ஒழுங்கமைக்கவும்.

(A) சர்க்காரியா ஆணையம், பூஞ்சி ஆணையம், ராஜமன்னார் குழு, முதல் நிர்வாகச் சீர்த்திருத்த ஆணையம்

(B) முதல் நிர்வாகச் சீர்த்திருத்த ஆணையம், ராஜமன்னார் குழு, சர்க்காரியா ஆணையம், பூஞ்சி ஆணையம்

(C) ராஜமன்னார் குழு, முதல் நிர்வாகச் சீர்த்திருத்த ஆணையம், சர்க்காரியா ஆணையம், பூஞ்சி ஆணையம்

(D) பூஞ்சி ஆணையம், முதல் நிர்வாகச் சீர்த்திருத்த ஆணையம். ராஜமன்னார் குழு, சர்க்காரியா ஆணையம்

5. அரசியலமைப்பின் எந்த விதி ஒரு மாநில முதலமைச்சருடன் தொடர்புடையதல்ல?

(A) விதி 163 (B) விதி 164 (C) விதி 165 (D) விதி 167

6. 'பாராளுமன்றம்' என்னும் சொல், பேசு என்று பொருளடங்கிய 'பார்லே' என்னும் _____ சொல்லிலிருந்து பெறப்பட்டது.

(A) பிரெஞ்சு மொழி (B) லத்தின் மொழி

(C) கிரேக்க மொழி (D) ஸ்பானிஷ் மொழி

7. (i) இந்திய ஜனாதிபதி நேர்முகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
(i i) இந்திய ஜனாதிபதி பெயரளவில் அரசின் தலைவர் ஆவார்.
மேற்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) (i) மட்டும் (B) (ii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) இரண்டும் (D) மேற்கண்ட எவையுமில்லை

8. அரசு நெறிமுறைக் கொள்கைகளை "நோக்கங்கள் மற்றும் விழைவுகளின் அறிக்கை" என அழைத்தவர் யார்?

(A) கே.சி. வேயர் (B) டி.டி. கிருஷ்ணமாச்சாரி

(C) சர் ஐவர் ஜென்னிங்ஸ் (D) பி.ஆர். அம்பேத்கர்

9. அடிப்படைக் கடமைகள் பற்றிய கூற்றுக்களைக் கருதுக. தவறான கூற்றினைக் கண்டறிக.

(i) வரிகளைச் செலுத்துதல்
(ii) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்\
(iii) இந்தியாவின் வளமான பாரம்பரியத்தைப் பேணிக்காத்தல்
(vi) தேர்தல்களில் வாக்களித்தல்

(A) (i) மற்றும் (ii) தவறு (B) (ii) மற்றும் (iii) தவறு

(C) (iii) மற்றும் (iv) தவறு (D) (i) மற்றும் (iv) தவறு

10. இந்திய அரசமைப்பின் அடிப்படைக் கட்டமைப்புடன் தொடர்பில்லாத வழக்கினைக் கண்டறிக.

(A) கேசவானந்த பாரதி எதிர் கேரள மாநிலம், 1973

(B) மினர்வா மில்ஸ் எதிர் இந்திய ஒன்றியம், 1980

(C) ஏ.கே. ராய் எதிர் இந்திய ஒன்றியம், 1982

(D) கோலக்நாத் எதிர் பஞ்சாப் மாநிலம், 1967

11. முதல் அரசமைப்புத் திருத்தம் -1951-மூலம் இந்தச் சட்ட உறுப்பு சேர்க்கப்பட்டது.

(A) விதி 15 (4) (B) விதி 15 (2) (C) விதி 15 (3) (D) விதி 15 (1)

12. ஜனனி சுரக்ஷ யோஜனா தொடர்புடைய வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு, சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம்.

(B) 100 சதவீத மத்திய அரசால் நிதியுதவி

(C) 100 சதவீத மாநில அரசால் நிதியுதவி

(A) (1) மற்றும் (2) (B) (1) மற்றும் (3)

(C) (2) மற்றும் (3) (D) (3) மட்டும்

13. கிராம மின்மயமாக்குதல் என்பது இந்தத் திட்டங்களின் மூலமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

(A) தீன தயாள உபாத்யாய கிராம ஜோதி திட்டம்

(B) தீன தயாள உபாத்யாய கிராமின் கௌசல்யா திட்டம்

(C) பிரதான் மந்திரி சஹாஜ் பிஜ்லி ஹர் கர் யோஜனா

(A) (i) மற்றும் (ii) மட்டும் (B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (ii) மற்றும் (iii) மட்டும் (D) (i), (ii) மற்றும் (iii)

14. பின்வருவனவற்றில் எது தவறுதலாகப் பொருத்தப்பட்டுள்ளது?

(1) RLEGP – ஊரக நிலமற்றோருக்கான வேலை உறுதித் திட்டம்

(2) SGSY – சம்பூர்ணா ஊரக சுயசார்புத் திட்டம்

(3) CSRE – மத்திய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

(4) NREGA – தேசிய ஊரகக் கல்வி உறுதித் திட்டம்

(A) (1) மற்றும் (3) மட்டும் (B) (2) மற்றும் (4) மட்டும்

(C) (1) மற்றும் (2) மட்டும் (D) (3) மற்றும் (4)

15. தீனதயாள் அந்தியோதயா திட்டம் உருவாக்கப்பட்டது.

(A) ஊரக வறுமையைக் குறைக்க (B) சிசு மரண வீதத்தைக் குறைக்க

(C) நகர்ப்புற வறுமையைக் குறைக்க (D) வேளாண் உற்பத்தியை அதிகரிக்க

16. 'ஒரே வரி, ஒரே சந்தை, ஒரே நாடு' என்ற பொன்மொழி எதனுடன் தொடர்புடையது.

(A) மத்திய வரி (B) நிறுவன வரி

(C) சரக்கு மற்றும் சேவை வரி (GST) (D) மாநில வரி

17. பின்வரும் வகையைப் பொருத்துக :

(a) நிதிக் கொள்கை – 1. நாணயத் தாள்களின் வெளியீடு

(b) பணவியல் கொள்கை – 2. கடன் விநியோகம்

(c) RBI – 3. ரொக்க இருப்பு விகிதம்

(d) கடன் கட்டுப்பாடு – 4. வரி விதிப்பு

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	1	2
(B)	3	4	1	2
(C)	2	1	3	4
(D)	1	2	4	3

18. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) விவசாய உற்பத்தியை அதிகரிக்க விவசாயம், நீர்ப்பாசனத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

(ii) இது சில மாற்றங்களுடன் ஹாரோட்-டோமர் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.

(iii) அது மஹாலனோபிஸ் மாதிரி பின்பற்றப்பட்டது.

(A) (i) மட்டும் (B) (i) (ii) மட்டும்

(C) (i), (iii) மட்டும் (D) (i) (ii) மட்டும்

19. கீழ்க்கண்டவற்றைக் கால வரிசைப்படுத்துக:

(1) மித்திர மேளா (2) அனு சீலன் சமிதி

(3) இந்தியத் தன்னாட்சிக் கழகம் (4) ஹிந்துஸ்தான் கதர்

(A) (1) - (2) - (3) - (4) (B) (4) - (3) - (2) - (1)

(C) 3) - (4) - (1) - (2) (D) (4) - (2) - (3) - (1)

20. 1947-இல் இந்தியத் தேசிய காங்கிரஸ் கட்சிப் பிரிவினைக்கு ஒப்புக் கொண்டது. ஏனெனில்

(1) இரு தேசக் கோட்பாடு அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பிரிட்டிஷ் அரசால் திணிக்கப்பட்டது மற்றும் காங்கிரஸ் இந்த விஷயத்தில் உதவியற்றது

(3) அவர்கள் பெரிய அளவிலான வகுப்புவாதக் கலவரங்களைத் தவிர்க்க விரும்பினர்

(4) மேற்கூறிய அனைத்துக் காரணங்களும்

(A) (1) மற்றும் (2) சரி (B) (3) மற்றும் (1) சரி

(C) (3) மட்டும் சரி (D) அனைத்தும் சரியானது

21. பின்வரும் நிகழ்வுகளைக் காலவரிசைப்படி ஒழுங்கமைக்கவும் :

(1) இந்திய அரசின் சட்டம் -1935 (2) காந்தி-இர்வின் ஒப்பந்தம்

(3) வகுப்புவாத ஒதுக்கீடு (4) கிரிப்ஸ் தூதுக்குழு

(A) (1), (2), (3), (4) (B) (3), (2), (4), (1)

(C) (2), (3), (1), (4) (D) (3), (2), (1), (4)

22. பின்வருவனவற்றில் தென் இந்தியாவில் சமூக மத இயக்கத்தில் ஒரு முக்கிய சங்கமாக நிரூபிக்கப்பட்டது எது?

(A) பிரார்த்தனா சமாஜம் (B) ஆரிய சமாஜம்

(C) பிரம்மஞான சபை (D) பிரம்ம சமாஜம்

23. தேசியக் குடிமைப் பணியாளர்கள் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது.

(A) மார்ச் 8 (B) ஜனவரி 7

(C) மே 11 (D) ஏப்ரல் 21

24. முதன் முதலாக "ஜன கன மன" எனும் பாடல் இந்தியத் தேசிய காங்கிரஸின் எந்த மாநாட்டில் பாடப்பட்டது?

(A) 1911 மும்பை மாநாட்டில் (B) 1911 டெல்லி மாநாட்டில்

(C) 1911 கல்கத்தா மாநாட்டில் (D) 1911 பீகார் மாநாட்டில்

25. பின்வருவனவற்றில் எது சரியாகப் பொருந்தவில்லை?

(A) தாதாபாய் நௌரோஜி – கிழக்கு இந்தியச் சங்கம்

(B) சாவித்ரி பாய் பூலே – இந்தியாவின் ஊழியர் சங்கம்

(C) சுரேந்திர நாத் பானர்ஜி – இந்தியச் சங்கம்

(D) ஏ.ஓ.ஹியூம் – இந்தியத் தேசிய காங்கிரஸ்

விடைகள்

1.–(C)	2.–(C)	3.–(A)	4.–(B)	5.–(C)
6.–(A)	7.–(B)	8.–(A)	9.–(D)	10.–(C)
11.–(A)	12.–(A)	13.–(B)	14.–(B)	15.–(C)
16.–(C)	17.–(A)	18.–(B)	19.–(A)	20.–(D)
21.–(C)	22.–(C)	23.–(D)	24.–(C)	25.–(B)

கீழ்க்கண்ட தலைப்புக்கான சரியான பதிலை இவ்வலுவலக இணையதள மின்னஞ்சலுக்கு அனுப்பும் கட்டுரைக்குப் பாராட்டுச் சான்றிதழ், புகைப்படத்துடன் கூடிய கட்டுரை அடுத்தமாத இதழில் இடம்பெறும்.

தலைப்பு:

மூத்த குடிமக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை உறுதி செய்வதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் 10.11.2025 அன்று தொடங்கி வைத்த **"அன்புச்சோலை திட்டம்"** மையங்கள் வாயிலாகப் பயன் பெற்றது குறித்து விவரிக்கவும்.

கட்டுரை அனுப்ப வேண்டிய இணையதள முகவரி: tamilarasujournal@gmail.com

“உங்களுடன் ஸ்டா

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்

திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள்

தேர்வு செய்யப்பட்ட படைப்புகளை காண QR Code-ஐ Scan செய்யவும்.

27.11.2025 அன்று சென்னை திருவல்லிக்கேணி, மகாகவி பாரதியார் நினைவு இல்லத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் நடத்தப்பட்ட “உங்களுடன் ஸ்டாலின்" போட்டிகளில் வெற்றிபெற்ற 36 நபர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

லின்” போட்டிகள்

- விழித்தெழு மனிதி! – வினாடி வினா போட்டியில் 2,100 நபர்களும்,
- வெல்வோம் ஸ்டாலினுடன் ரீல்ஸ் போட்டியில் 389 நபர்களும்,
- இன்போகிராஃபிக் வடிவமைப்புப் போட்டியில் 497 நபர்களும்,
- உங்களுக்கு பிடித்த திட்டம் – கட்டுரை போட்டியில் 1,087 நபர்களும்,
- நம்முடன் ஸ்டாலின் – புகைப்படப் போட்டியில் 659 நபர்களும் கலந்து கொண்டனர்.

இவர்களில் 36 நபர்கள் வெற்றி பெற்றவர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

புகைப்படப் போட்டி /
இன்போகிராஃபிக் வடிவமைப்புப் போட்டி

DIPR | வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை

tndipmews | tndipr | tndipr | TN DIPR | www.dipr.tn.gov.in | TNDIPR, Govt. of Tamil Nadu

2026ஆம் ஆண்டிற்கான
அரசு பொது விடுமுறை நாட்கள்

வ. எண்	பொது விடுமுறை	தேதி	கிழமை
1.	ஆங்கிலப் புத்தாண்டு	01.01.2026	வியாழக்கிழமை
2.	பொங்கல்	15.01.2026	வியாழக்கிழமை
3.	திருவள்ளுவர் தினம்	16.01.2026	வெள்ளிக்கிழமை
4.	உழவர் திருநாள்	17.01.2026	சனிக்கிழமை
5.	குடியரசு தினம்	26.01.2026	திங்கட்கிழமை
6.	தைப்பூசம்	01.02.2026	ஞாயிற்றுக்கிழமை
7.	தெலுங்கு வருடப் பிறப்பு	19.03.2026	வியாழக்கிழமை
8.	ரம்ஜான் (Idul Fitr)	21.03.2026	சனிக்கிழமை
9.	மகாவீர் ஜெயந்தி	31.03.2026	செவ்வாய்க்கிழமை
10.	* வங்கிகள் ஆண்டுக் கணக்கு முடிவு (வணிக / கூட்டுறவு வங்கிகள்)	01.04.2026	புதன்கிழமை
11.	புனித வெள்ளி	03.04.2026	வெள்ளிக்கிழமை
12.	தமிழ்ப் புத்தாண்டு / டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த தினம்	14.04.2026	செவ்வாய்க்கிழமை
13.	மே தினம்	01.05.2026	வெள்ளிக்கிழமை
14.	பக்ரீத் (Idul Azha)	28.05.2026	வியாழக்கிழமை
15.	மொகரம் (Yaom-E-Shahadath)	26.06.2026	வெள்ளிக்கிழமை
16.	சுதந்திர தினம்	15.08.2026	சனிக்கிழமை
17.	மிலாதுன் நபி (Prophet's Birthday)	26.08.2026	புதன்கிழமை
18.	கிருஷ்ண ஜெயந்தி	04.09.2026	வெள்ளிக்கிழமை
19.	விநாயகர் சதுர்த்தி	14.09.2026	திங்கட்கிழமை
20.	காந்தி ஜெயந்தி	02.10.2026	வெள்ளிக்கிழமை
21.	ஆயுத பூஜை	19.10.2026	திங்கட்கிழமை
22.	விஜயதசமி	20.10.2026	செவ்வாய்க்கிழமை
23.	தீபாவளி	08.11.2026	ஞாயிற்றுக்கிழமை
24.	கிருஸ்துமஸ்	25.12.2026	வெள்ளிக்கிழமை

* தமிழ்நாட்டிலுள்ள வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள்
10.12.2025 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வுபெற்று நலிந்த நிலையில் உள்ள 42 பத்திரிகையாளர்களுக்குத் தலா ரூ.12 ஆயிரம் மாதாந்திர ஓய்வூதியத்திற்கான ஆணைகளை வழங்கினார்.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.12.2025 அன்று தலைமைச் செயலகத்தில், இந்தியன் ஸ்குவாஷ் அகாடமியின் சார்பில் சென்னையில் நடைபெற்ற SADT ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2025 போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணியைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள்-ஜோஷ்னா சின்னப்பா, அபே சிங், அனஹத் சிங், வேலவன் செந்தில்குமார், ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் இயக்குநர் திரு.சைரஸ் போன்சா மற்றும் பயிற்றுநர்கள் ஹரிந்தர் பால் சிங், ஆலன் சோய்சா ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department, Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and
Printed by: R.Pugazh Vendhan at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,